Free Circulation Germany- England
மணி: 71 - ஓசை: 297 ஜுன். June. 2021

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
27TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன். B.F.A

Orientalisch
Textilien & Schmuck
31 ஆவது ஆண்டு நிறைவு
என்றும் எம்முடன் தொடர்பில் இருங்கள்

Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# கொழும்பில் தன்னாதிக்கத்துடன் உருவாகியிருக்கும் சீன நகரம்

## இங்கிலாந்தில் மீண்டும் கல்யாணம்,கச்சேரி, கோண்டாட்டங்கள் ஜூனில் தோடங்குமா?



மணிவிழாக் காணும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கு வெற்றிமணியின் வாழ்த்துகள்

## அரசியல் களம்

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி

## கண்டால் வரச்சொல்லுங்கள்

Dr.IN





# கண்டால் வரச்சொல்லுங்கள்



மாதவி
(யேர்மனி)

செய்திகள் பல இன்று செய்திக்காகவே செய்தியாகின்றன. காலம் நேரம் பார்த்து பல சமூக ஊடகங்களில் வெற்று ஊசிகளை ஏற்றி மக்களை ஒருவித மயக்கநிலையில் வைத்திருப்பதில் வல்லவர்களாக இருக்கிறார்கள். தங்களை திரும்பி பார்க்கவைப்பதற்கான தகவல்களை திரட்டி வட்சப், பேஸ்புக், டுவிட்டர் என பல சமூக ஊடகங்களில் உண்மையை உரசிப் பார்க்காது பதிவிடுகின்றார்கள்.

வட்டுக்கோட்டையில் ஐந்து தலைப் பாம்பு.

காலை வணக்கம் அதனைத் தொடர்ந்து கொஞ்சக்காலம் வட்சப், பேஸ்புக் எல்லாம் இந்த ஐந்து தலைப் பாம்பு படமெடுத்த வண்ணமே இருந்தன. உற்று நோக்கினால் ஐந்து தலைப் பாம்புக்கு, நிழல் ஒரு தலைமட்டுமே தரையில் விழுகிறது. போட்டோசொப் காதல் விளையாட்டுக்கு மட்டுமல்ல இப்படியான அதிசயங்களை உருவாக்கவும் பயன்படுகின்றது.

கடவுள் மீது பக்தி கொண்டவர்களை குறிவைத்து, அவரவர் சமயங்களை மகிழ்ச்சிப்படுத்த சில செய்திகளை பரப்புவார்கள். அமெரிக்க விமானப்படை வானத்தில் திரிசூலம் போல் புகைக்கோலம் போட்டது என்று போட்டோ சொப்பில் செய்த படம் படம்காட்டியது. மற்றும் மேல் இருந்து பார்த்தால் வத்திக்கான் சிவலிங்கம் அமைப்பில் கட்டப்பட்டுள்ளது, என படங்களும் போட்டும் ஒரு மாதத்திற்கு ஓட்டுவார்கள். அதனை மேடைகளில் அப்படியே ஒப்புவித்து மக்களை மாக்களாக்குபவர்களும் உண்டு. வானத்தை படம் எடுத்து, ஆட்டுக் குட்டியுடன் கர்த்தர் உள்ளார் என்று படம் போடுவார்கள். இந்த இயற்கையே அவன் படைப்புத் தானே!

தென்னை மரத்தில் பிள்ளையார். கடவுளின் கண்களில் இரத்தம் வழிந்தது, என பல அதிசயங்களை சமூக ஊடகங்களை எப்போதும் உசுப்பேத்திகொண்டே இருப்பார்கள். அந்தக்காலத்திலும் இப்படிச் செய்திகள் வாய்மொழியாகப் பரவியது. பால் ஊற்றியவர்கள் அன்றும் உண்டு. இந்த விநோதங்களை செய்தித்தாள்களிலும் பார்க்கமுடிந்தது.

தென்னை மரத்தின் உச்சியில் உள்ள தேங்காயினுள் இளநீர் எப்படி வந்தது? வானத்தில் பறவை எப்படி பறக்கிறது.

இவை எல்லாம் அதிசயம் இல்லையா? இயற்கை நமக்கு தினம் காட்டும் அதிசயங்களை விட வேறு என்ன உங்கள் கற்பனையில் உதித்திட முடியும். ஒரு முறை உங்கள் ஒவ்வொரு உறுப்பையும் உற்று யோசியுங்கள். அசந்து போவீர்கள். அந்த உடம்பை இவ்வளவு கச்சிதமாக படைத்தவனை எண்ணிவியந்து போவீர்கள். (பானை ஒன்று இருந்தால் அதனை வனைந்த குயவனும் இருப்பான் என்றால், நம்மை வரைந்த ஆண்டவன் அல்லது ஒரு சக்தியும் இருக்கும் என்பது உண்மையல்லவா!)

இன்று covid19 காலம்! எந்த ஊசி சிறந்தது பட்டிமன்றமே தினம் நடக்கிறது. எதனைச் சொன்னாலும் நம்பும் நேரம். விடுவார்களா தினமும் ஒரு வைத்தியம் வட்சப் வழியாக வழிந்தோடும். covid 19 தடுப்பு ஊசி. இப்போ இதுதான் சீசன்.

எந்த ஊசி சிறந்தது பட்டிமன்றம் நடக்கிறது. இந்த ஊசி நல்லது என்று ஒருவர் வட்சப்பில் பதிவிட்டு இருந்தால், மறுகணம் அவருக்கு தொலைபேசி எடுத்து கேட்டால், நான் அது தான் போட்டேன் என்பார். தான் போட்ட ஊசியே சிறந்தது என்று எண்ணுவதும், ஒரு வகையில் மனோபலத்தை அவருக்கு கொடுக்கட்டுமே என்று விட்டு, உங்கு இப்ப மழையோ என்று கதையை மாற்றினாலும் விடமாட்டார்கள். அஸ்டாசெனிக்கா இரத்தம் உறையும் என்று உரக்கச் சொல்வார்கள். தற்போது ஒரு செய்தி உலாவருகிறது. covid 19 காலம் ஆரம்பித்த நாள் முதலாய் அது இயற்கையா? செயற்கையா? என்று ஆதாரம் நிறுவியும் நிறுவாமலும், செய்திகள் வந்தவண்ணமே உள்ளன. அவற்றை நம்பகமானதாக காட்ட பல்கலைக்கழகம் அல்லது விஞ்ஞானிகள் பெயரில் போட்டு உலாவ விடுவார்கள். அப்படி ஒரு செய்தி இதோ.

2018 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு வென்ற ஜப்பானிய மருத்துவர், விஞ்ஞானி மற்றும் நோயெதிர்ப்பு நிபுணர் டாக்டர் தாசுகு ஹொன்ஜோ, கொரோனா வைரஸ் இயற்கையானது அல்ல என்று கூறி இன்று ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தினார்.(செய்தியை செய்தியாக மட்டும் பாருங்கள்.) அது இயற்கையானதாக இருந்தால், அது முழு உலகத்தையும் அப்படி பாதிக்காது. ஏனெனில், இயற்கையைப் பொறுத்து, வெவ்வேறு நாடுகளில் வெப்பநிலை வேறுபட்டது. இது இயற்கையாக இருந்தால், அது சீனாவைப் போன்ற வெப்பநிலையைக் கொண்ட நாடுகளை மட்டுமே பாதித்திருக்கும். அதற்கு பதிலாக, அது சுவிட்சர்லாந்து போன்ற ஒரு நாட்டிலும் பரவுகிறது, அது பாலைவன பகுதிகளுக்கும் பரவுகிறது. அதேசமயம் அது இயற்கையாக இருந்தால், அது குளிர்ந்த இடங்களில் பரவியிருக்கும், ஆனால் வெப்பமான இடங்களில் இறந்திருக்கும். விலங்குகள் மற்றும் வைரஸ்கள் குறித்து 40 வருட ஆராய்ச்சி செய்துள்ளேன். இது இயற்கையானது அல்ல. இது தயாரிக்கப்பட்டு வைரஸ் முற்றிலும் செயற்கையானது.

நான் சீனாவில் வுஹான் ஆய்வகத்தில் 4 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். இந்த ஆய்வகத்தின் அனைத்து ஊழியர்களையும் நான் நன்கு அறிவேன். கொரோனா விபத்துக்குப் பிறகு நான் அனைவரையும் அழைத்தேன், ஆனால், அவர்களின் தொலைபேசிகள் 3 மாதங்களாக இல்லை. இந்த ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் அனைவரும் இறந்துவிட்டார்கள் என்பது இப்போது புரிகிறது. இன்றுவரை எனது அறிவு மற்றும் ஆராய்ச்சி அனைத்தையும்

28 ஆம் பக்கம் பார்க்க...








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 297


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333

+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276


# கொழும்பில் தன்னாதிக்கத்துடன் உருவாகியிருக்கும் சீன நகரம்!

**கொழும்பிலிருந்து ஆர்.பாரதி**

இலங்கையின் சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்ததும் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டதுமான கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் பாராளுமன்றத்தில் 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 149 வாக்குகளும் எதிராக 58 வாக்குகளும் வழங்கப்பட்ட நிலையிலேயே 91 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

ஆக, இலங்கையில் தன்னாதிக்கத்தைக் கொண்ட சீனாவின் தீவு ஒன்று உருவாகப் போவது உறுதியாகியிருக்கின்றது. எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அமெரிக்கா வெளிப்படையாகவே தமது எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தது. அண்டை நாடான இந்தியா வெளிப்படையாகப் பேசாவிட்டாலும், மறைமுகமாக தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது.



இவை அனைத்தையும் தாண்டி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இரண்டு நாள் விவாதத்தின் பின்னர் கடந்த வியாழக்கிழமை சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு, சீனாவுக்கு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிரந்தரமான ஒரு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சிகள் பல விடயங்களையும் சுட்டிக்காட்டியிருந்தன. முக்கியமாக, தனி நாட்டுக்கு இணையான அதிகாரங்களைக் கொண்டதாக கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவுக்கான அதிகாரங்கள் உள்ளன. இது இலங்கையின் இறைமைக்கு ஆபத்து என்பதை அவை சுட்டிக்காட்டியிருந்தன.

இந்த நிலையில், பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதையும், பிரதான கட்சிகள் எவ்வாறான தமது பிரதிபலிப்பை வெளிப்படுத்தியிருந்தன என்பதையும் சுருக்கமாகப் பார்ப்போம். பாராளுமன்றத்தில் சட்டமூலம் மீதான விவாதம் முடிவடைந்த பின்னர் இரண்டாவது வாசிப்பு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 148 வாக்குகளும், எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதன் பின்னர் இடம்பெற்ற குழு நிலையில் அரசாங்கத்தினால் திருத்தங்கள்முன் வைக்கப்பட்டதுடன், எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு ஆளும்கட்சி இணங்கவில்லை. இதனால் மூன்று சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுக்கு வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. இதன்பின்னர் நடத்தப்பட்ட மூன்றாவது வாசிப்பிலேயே கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான மூன்றாவது வாசிப்பு பாராளுமன்றத்தில் 91 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் கடந்த ஏப்ரல்மாதம் 8 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் பலதரப்புக்களினால் உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்நிலையில் இச் சட்டமூலம் தொடர்பான தனது வியாக்கியானத்தை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அனுப்பி வைத்த நிலையில் அதனை சபாநாயகர் கடந்த 18 ஆம் திகதி சபைக்கு அறிவித்தார். உயர்

நீதிமன்றத்தின் வியாக்கியானத்தில் சட்டமூலத்தில் சில சரத்துக்களை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பும், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் நிரூபிக்கப்பட வேண்டுமென தெரிவித்திருந்தது. அத்துடன் திருத்தங்களையும் முன்வைத்திருந்தது.

இந்நிலையில் உயர் நீதிமன்றத்தின் திருத்தங்களை ஏற்றுக்கொவதாக அறிவித்த அரசு சட்ட மூலம் தொடர்பான விவாதத்தை கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய இரு தினங்களாக பாராளுமன்றத்தில் நடத்தியது. இவ்வாறான நிலையிலேயே விவாதத்தின் இறுதி நாளான வியாழக்கிழமை அதனை நிறைவேற்ற அரசு முயன்றபோது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஐக்கிய மக்கள்

சக்தி எம்.பி.லக்ஷ்மன் கிரியெல்ல சட்டமூலம் தொடர்பில் வாக்கெடுப்பைக் கோராது தமது எதிர்ப்பை பதிவு செய்யுமாறு சபாநாயகரிடம் கோரினார்.

இதற்கிடையில் எழுந்த ஜே.வி.பி.எம்.பி விஜித ஹேரத் சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்கடுப்பைக்கோரினார்.இதனையடுத்து இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் அரசதரப்பும் அரசின் பங்காளிக்கட்சிகளும் சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்காளிக்கட்சிகளும் , தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஜே.வி.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான ரிசாத் பதியுதீன் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர்.

இதேவேளை ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் வாக்கையெடுப்பில் பங்கேற்காத

27 ஆம் பக்கம் பார்க்க...





விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

கே.எஸ்.சுதாகர்
(மெல்போன்– அவுஸ்திரேலியா)







ஆனந்தன் தன் இஸ்டப்படி அனுஜாவை ஆட்டிவைக்க முனைந்தான். அது சரிவராதுபோக, பத்துவருட தாம்பத்தியத்தை முறித்துக்கொண்டு, அனுஜா ஆனந்தனை விட்டுப் பிரிந்துவிட்டாள். இதை ஆனந்தன் துளியும் எதிர்பார்க்கவில்லை.

'நண்பா… நான் கனவிலும் நினைக்கேல்லையடா! இவள் இப்படிச் செய்வாள் எண்டு. மூக்கைப் பொத்தினா வாயைத் திறக்கத் தெரியாத சீவன். இப்ப? இறக்கை முளைச்சிட்டுது. பெடிச்சிக்கு வேலை செய்யுறன் எண்ட திமிர். ஒருக்கா எனக்காக அவளோடை கதைச்சுப் பாரன்டா' ஆனந்தன் தன் நண்பன் ராஜலிங்கத்திடம் கெஞ்சினான்.

'கதைக்கலாம் தான். ஆனா'…

'என்ன ஆனாவும் ஆவன்னாவும். கதைக்கிறாய். எனக்காகக் கதைக்கிறாய். உவளுக்கு மூன்று பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு போக எப்பிடித் துணிவு வந்ததோ? பெடிச்சி வடிவும் தானே! அதுதான் ஆரையேன் கட்டுவோம் எண்டு கிழம்பியிருப்பாள்!'

ஆனந்தன் – அனுஜாவைத் தன்னுடன் சேர்த்துவைக்குப்படி, நண்பன் ராஜலிங்கத்திடம் கெஞ்சினான், மன்றாடினான், தூது விட்டான்.

'தயவு செய்து வேலை செய்யிற இடத்துக்கு போன் பண்ணாதீங்க. மனசுக்கு கஸ்டமாக இருக்கு' என்றாள் அனுஜா.

'அப்ப நான் உங்களை எப்படித் தொடர்பு கொள்ளுறது?' என்று கேட்டான் ராஜலிங்கம். 'பின்நேரம் அம்மன் கோவிலுக்கு வருவன். பூசை முடிஞ்சாப்போல சந்திச்சுக் கதைக்கலாம். '

'நன்றி'.

பூசை முடிந்து, மாலைக் கருக்கலாகிவிட்டது. கோவில் வளவில் நின்ற சடைத்த பூக்கன்றின் பின்னால், அனுஜா யாரோ ஒருவருடன் கதைத்துக் கொண்டு நின்றாள். ராஜலிங்கம் வருவதைக் கண்டதும் அவன் அவ்விடத்தைவிட்டு விலகி இருளோடு கலந்தான்.

'அவரோடை வாழ முடியாது. அந்தாள் ஒரு மனோவியாதிக்காரன். தயவுசெய்து என்னைத் தொந்தரவு செய்யாதீங்க!' என்று அழாக்குறையாகச் சொன்னாள் அனுஜா.

'அப்ப கொஞ்சம் முன்னுக்கு ஒரு கறுவலோடை நிண்டு கதைச்சுக் கொண்டிருந்தீங்க. அவரை உங்களுக்குப் பிடிச்சிருக்கோ? ' கொஞ்சம் சூடாகவே கேட்டான் ராஜலிங்கம்.

'தயவுசெய்து என்னுடைய சொந்த விஷயங்களிலை நீங்கள் தலையிடாதீங்க!' ராஜலிங்கத்திற்குக் கோபம் தலைக்கேறியது. அவன் ஒரு ஸ்திரிலோலன். அவனுக்குள் இருந்த மிருகம் வெளியே பாயத் துடித்தது.

'அப்ப என்னைப் பிடிச்சிருக்கா? இதிலை ஒண்டு குடுங்க பார்ப்பம்' அனுஜாவைக் கட்டிப்பிடித்து, அவளின் முகத்துக்கு நேரே தன் கன்னத்தைத் திடீரென்று நீட்டினான் ராஜலிங்கம். அனுஜா இதை எதிர்பார்க்கவில்லை. அவனிடமிருந்து தன்னை விடுவித்தவாறே, கோவில் என்றும் பாராமல், ஒல்லியாக நெடுத்திருந்த அவன் கன்னத்தில் ஓங்கிப் பளாரென்று அறைந்தாள்.

ஒரு அடிதான். ராஜலிங்கம் விழுந்துவிட்டான். இவர்கள் இருவரும் கதைக்கத் தொடங்கிய நேரம் முதல், இவர்களையே நோட்டம் விட்டுக் கொண்டிருந்த கோவில் அடியார்கள் பதறிப்போனார்கள்.

'சுரண்டிப் பார்த்து லக் அடிச்சா வைச்சிருக்கவும், ஒண்டும் விழாட்டி தூக்கிக் கடாசி எறியவும் நான் என்ன சுவீப் ரிக்கற்றா?'

சத்தம் கேட்டு எல்லோரும் கோவிலுக்குள் ஓடி மறைந்தார்கள். உள்ளே அவர்களுக்கு அம்மன் உக்கிரம் கொண்டு காட்சியளித்தார். ராஜலிங்கம் இன்னமும் நிலத்தில் இருந்து எழவில்லை.

---

# யாழின் வரலாற்று சின்னங்களை பாதுகாக்க மரபுரிமை மையம்!

## புதிய அமைப்பு அங்குரார்ப்பணம்





உள்ள வரலாற்று சின்னங்களான மந்திரி மனை, சங்கிலியன் அரண்மனை, யமுனா ஏரி போன்றவற்றை பாதுகாத்து அதை மீள்நிர்மானம் செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம் மரவுரிமைய மையம் என்னும் அமைப்பு கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மரவுரிமைச்சின்னங்களை பாதுகாப்பதற்கு ஒரு அமைப்பினை நிறுவுவதற்கு யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மேற்கொண்ட முயற்சியினால் 11 நபர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட குறித்த அமைப்பு இன்று நிறுவப்பட்டுள்ளது. மாநகர முதல்வரின் தலமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மரவுரிமை மையத்தின் தலைவராக வரலாற்று துறை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் யாழ்ப்பாணம் மரவுரிமை மையத்தின் உப தலைவர்களாக வைத்திய கலாநிதி பேராசிரியார் ரவிராஜ் மற்றும் நடராஜா சுகிதராஜ்யும் செயலாளராக மருத்துவ பீட பதிவாளர் ராஜேந்திரம் ரமேஸ், துணைச் செயலாளராக பாசுப்பிரமணியம் கபிலன் பொருளாளராக பேராசிரியர் செல்வரட்ணம் சந்திரசேகரம் இணைப் பாளராக சிவகாந்தன் தனுஜன் பதிப்பசிரியராக வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மையத்தின் உறுப்பினர்களாக விஸ்வலிங்கம் மணிவண்ணன், விஸ்வபாலசிங்கம் மணிமாறன், பூவானசுந்தரம் ஆரூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொது மக்களின் பங்களிப்புடன் இவ் அமைப்பு வரலாற்று சின்னங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும். எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அனைத்திலும் உள்ள வரலாற்று சின்னங்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இங்கிலாந்தில் மீண்டும் கல்யாணம்,கச்சேரி, கொண்டாட்டங்கள் ஜூனில் தொடங்குமா?

## இது திகதிகள் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல சம்பவங்கள் சம்பந்தப்பட்டது!

பிரிட்டனின் தேசிய விளையாட்டு கிரிக்கெட் அல்ல. இங்கு உதைபந்தாட்டம்-football தான். சனி, ஞாயிற்றுக்கிழமைகள் என்றால் ஊரிலுள்ள இளவட்டங்கள் எல்லாம் நிறைய சோமபானம் அருந்திவிட்டு மேலதிகமாக கேன்களிலும் ஊற்றி எடுத்துக் கொண்டு நகர்வலம் புறப்பட்டு தங்களது அபிமான உதைபந்தாட்ட போட்டிகளுக்குச் செல்கின்றனர். போகும் வழியில் ஆபாச பேச்சுக்களோடு வீதியில் போகும் கார்களுக்கும் கறுப்பின மற்றும் ஆசியர்களுக்கும் கலாட்டா செய்து கோபத்தில் குரைத்தபடி மைதானத்திற்குள் நுழைவார்கள். மைதானத்தில் போட்டியின் போது, இரண்டு அணிகள் விளையாடும். ஒரு அணியில் மிகப் பிரபலமான கறுப்பின வீரர் ஒருவர் விளையாடுவார். அவரைப் பார்த்த இந்தக் குடிகார விஷமிகள் நிறவெறி கோஷங்களை எழுப்புவார்கள். இந்தக் கோஷங்களினாலும் மனமுடைந்து போன கறுப்பின வீரர்கள் சிலர் மன நோயாளிகளாகி விளையாட்டை விட்டே விரட்டியடிக்கப்பட்ட கதைகளும் உண்டு. உதைபந்தாட்ட போட்டி நடைபெறும் தினங்களில் ஊடகங்களுக்கு இதுவே முக்கியச் செய்தி.



விமல் சொக்கநாதன் (இங்கிலாந்து)

காலையில் எழுந்ததும் பெற்றோரின் ஊதியத்தை நம்பி தின்று, குடித்து, ஊதாரித்தனம் செய்யும் இந்த இளவட்டங்கள் இலங்கையில், இந்தியாவில் மட்டும்தான் இருக்கிறார்கள் என்றில்லை. நாகரீக நாடுகளில் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் இந்திய இலங்கை இளசுகளுக்கும் மேல்நாட்டு இளசுகளுக்கும் ஒரு மிகப்பெரும் வித்தியாசம். மேல்நாட்டு இளசுகளுக்கு கைச்செலவுக்கென வாராவாரம் அரசாங்கமே பணம் கொடுக்கிறது. இதற்கு Income support/ Social security இப்படி பல்வேறு பெயர்கள். அடிமட்ட ஆங்கிலத்தில் dole என்றும் சொல்வார்கள்.

இலங்கையில் எங்கள் மூத்த தமிழ் குடியினர் இதை பிச்சை சம்பளம் என்றும் குறிப்பிடுவார்கள். உதாரணமாக பிரிட்டனில் ஒருவர் 100 பவுண்ட்ஸ் உழைத்துச் சம்பாதித்தால் அதிலே 40 பவுண்ட்சை அரசாங்கம் வருமான வரியாகப் பிடித்துக் கொண்டு மீதமுள்ள 60 பவுண்ட்ஸை மட்டுமே ஒருவருக்கு கொடுக்கிறது. ஹபிச்சை சம்பளம்ஹ போன்ற அரசாங்க செலவினங்களுக்கு இந்த வருமான வரியே செலவிடப்படுகிறது.

சரி, இனி விஷயத்திற்கு வருவோம்! வாராவாரம் இப்படி அரசிடமிருந்து ஓசிப் பணம்ஹ பெறும் விசிலடிச்சான் குஞ்சுகள் நாள் முழுக்க pubs-மது சாவடிகளில் கூட்டம் போட்டு வார இறுதியில் உதைபந்தாட்டப் போட்டிக்கு போய் அவ்வப்போது போதை வஸ்துக்களை உட்



கொண்டு நிறத்தவர் [வெள்ளையர் அல்லாதோர்] மீதும் அதிகாரிகள் மீதும் கலவரம் நிகழ்த்துவார்கள். பிரிட்டிஷ் பொலிசாரும் ஊடகங்களும் இந்த football இளசுகளுக்கு வைத்துள்ள பெயர் `football hooligans' -கால் பந்து காவாலிகள் /காடையர்கள். கடந்தாண்டு மார்ச் மாதத்தில் பிரிட்டனை கொரோனா அரக்கன் தாக்கிய போது அரசு மேற்கொண்ட முதல் நடவடிக்கை இந்த கள்ளுக்கடைகளைப் பூட்டுதல், உதைபந்தாட்ட போட்டிகளை நிறுத்துதல் இவைதான்.

கொழும்பு போன்ற நகரங்களில் சில கடைகளிலும், சில வீடுகளில் புழக்கடையிலும் சாராயத்தைக் காய்ச்சி பல்வேறு சட்ட விரோதப் பொருட்களையும் சேர்த்து 'கசிப்பு' என்ற பெயரில் விற்பார்கள். ஆனால் இங்கு பிரிட்டனில் அசல் மதுவே விலை மலிவு என்பதால், சட்டவிரோத கசிப்புக்கு தேவையில்லை.

ஐக்கிய இராஜ்ஜியம் என்று அழைக்கப்படும் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து ஆகியவற்றில் கோவிட் இறுக்கம் தளர்த்தப்படுவது பற்றி பிரிட்டிஷ் அரசு கால அட்டவணை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் பெரும்பாலாவை அடுத்த மாதம் ஜூன் 21ஆம் திகதி அகற்றப்பட முடியுமென்று பிரதமர் போரிஸ் ஜான்சன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால் இது திகதிகள் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல சம்பவங்கள் சம்பந்தப்பட்டது, மருத்துவமனைகளில் கோவிட் தொற்றுடன் எவ்வளவு ■

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# தாய் மண்ணில் கல்வியில் மீண்டும் எழுச்சியுறும் தமிழ் மாணவர்கள்!

## தேசிய மட்டத்தில் முதல் இடம்!

**வ.சிவராஜா**
**(யேர்மனி)**

தாயகத்தில் போர் அனர்த்தங்களால் நீண்டகாலம் கல்வி வளர்ச்சியில் தமிழர்பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து வந்துள்ளன. இன்றைய கல்வி நிலையைப் பார்க்கும்போது தமிழர் பிரதேசங்கள் படிப்படியாக முன்னேறி வருவதாகத் தெரியவருகின்றது. மாணவர்களின் கடும் உழைப்பு, பெற்றோரின் அதித்த கவனம், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, தமிழ்ச்சமூகத்தின் விழிப்புணர்வு போன்றவையால் கல்வி எழுச்சி பெற்று வருகின்றது.

அண்மையில் வெளியான 2020 க.பொ.த உயர்தரப் பரீட்சையின் முடிவுகளை வைத்துப் பார்க்கும் போது தமிழ்ப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சி உயர்ந்திருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. நகரப்புறப் பாடசாலைகள் மட்டுமல்லாமல் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களும் கணிசமான தொகையினர் சித்திபெற்றுச் சாதனை படைத்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் நிலவும் பல்வேறு நெருக்கடிகளோடு, உலகையே அச்சுறுத்திவரும் கொரோனாக் காலத்திலும் மாணவர்களின் சாதனையானது வரலாற்றுப் புகழ்மிக்கதாகும். பல சவால்களை எதிர்கொண்டுவரும் மாணவர் சமுதாயம் அத்தனை தடைகளையும் எதிர்கொண்டு கல்வியில் சாதனை படைத்திருக்கிறார்கள் என்னும்போது அவர்களை நாம் பாராட்டி மகிழ்விக்க வேண்டும்.

சராசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி [Hindu College] மாணவனுமாகிய செல்வன்




தனராஜ் சுந்தர்பவன்

தனராஜ் சுந்தர்பவன் கணிதம், பெளதீகத்துறையில் அனைத்துப் பாடங்களிலும் "A" பெறுபேற்றைப் பெற்று தேசிய மட்டத்தில் 1வது இடத்தையும் யாழ் மாவட்டத்தில் 1வது இடத்தையும் பெற்று சாதனை நிலைநாட்டியிருக்கிறார். இவர் சென்ற வருடம் கல்வியியல் ஒலிம்பியா போட்டியிலும் வெளிநாடு சென்று வெற்றிவாகைசூடி நமது இனத்துக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்திருக்கிறார்.

அடுத்து உரும்பராயைச் சேர்ந்த செல்வன் பிரசாந்த் சிறீகாந்தன் வர்த்தக வணிகப்பிரிவில் அனைத்துப் பாடங்களிலும் "A" பெறுபேற யாழ் மாவட்டத்தில் 1 வது இடம் தேசிய மட்டத்தில் 5 வது இடம் பெற்றுச் சாதனை படைத்திருக்கிறார். இவர் யாழ்–பரியோவான் கல்லூரியின் [St.Johns College] மாணவனாவர். விளையாட்டுத்துறைகளிலும் சிறந்து விளங்கும் இவர் தனது 13 வயதிலிருந்து இற்றைவரை கல்லூரியின் துடுப்பாட்ட [Cricket Team] அணியில் இடம்பிடித்து விளையாடி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

இவர்கள் மட்டுமல்ல தமிழ்ப் பிரதேச மாணவர்களின் பரீட்சை முடிவுகள் தமிழ் பேசும் சமூகங்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. கடந்த பல வருடங்களாக பரீட்சை முடிவுகளில் ஆண்களை விடப் பெண்பிள்ளைகளே கூடுதலானோர் சித்தியெய்தினர். ஆனால் இந்தமுறை கூடுதலான



பிரசாந்த் சிறீகாந்தன்

ஆண் பிள்ளைகள் சித்தியடைந்திருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.. எப்படியாயினும் தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவமணிகள் இந்தமுறை கூடுதலான தொகையினர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிவிட்டமை பாராட்டுக்குரியதே.

இன்னொரு மாணவி கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி மகேஸ்வரன் கயலினி. இவர் உயிரியல் தொழில் நுட்பப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றிருக்கிறார். இவர் குடும்பம் வறுமையில் போராடிவர, கல்வியைத் தொடர்ந்துகொண்டு ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வந்திருக்கிறார். வறுமையுடன் போராடினாலும் கல்வியை உயிர்மூச்சாகக் கொண்ட இந்த மாணவியைப் பாராட்டி வாழ்த்துவோம்..

இவ்வளவு துன்பங்கள், துயரங்கள் மத்தியில் தமிழ்ப்பிரதேசங்களின் கல்விநிலை படிப்படியாக உயர்ந்து வருவதைக் காணக்கூடியதாக இருப்பது சிறப்பான விடையமாகும். இன்னும்..இன்னும் வளர்ச்சிபெற வேண்டும் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் நாம் தாயக மாணவர்களின் கல்வியை வளர்தெடுக்க மேலும் உதவவேண்டும்.

இப்படத்தில் காணப்படும் செல்வன் சிறீகாந்தன் பிரசாந்தின் நிழற்படத்தைப் பார்க்கும் போது ஒரு எண்ணம் தோன்றுகின்றது. நடைபெற்று முடிந்த போரின் வடுக்களிலிருந்து, அவலங்கள், நெருக்கடிகள் அனைத்தையும் தாண்டி, வெற்றிகொண்டு மீழெழுச்சிபெற்று கல்வியில் முன்னேறி வருகிறார்கள் என்று சொல்லத் தோன்றுகின்றது.

வீழ்ச்சியடைந்த தமிழினத்தின் கல்வியை அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற எழுச்சியையும் நம் இனத்துக்குக் கெளரவத்தையும் பெற்றுத் தந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டுவோம். தொடர்ந்து சாதனைகள் நிலைநாட்ட வாழ்த்துவோம்!.. கல்வியே உயிர் மூச்சாகக் கொண்டு வாழும் தமிழ்ச்சமூகம் உலகெங்கும் வெற்றிப்படிகளில் பிரகாசிப்பார்கள் என நம்புவோம்.

**மாணவச்செல்வங்கள்**
**அனைவரையும்**
**'வெற்றிமணி'வாழ்த்தி நிற்கின்றது.**




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கண்டிஷன்... கண்டிஷன்...

## எனக்கு வரப்போகிறவர் இப்படித்தான் இருக்க வேண்டும் எனக் கண்டிஷன் போடும் பெண்கள்!

'மணல் கயிறு' திரைப்படம் பார்த்திருக்கிறீர்களா? அதில் வரும் கதாநாயகனான S.V.சேகர் தனக்கு வரப்போகும் மனைவி எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்ற கண்டிஷன்களுடன் கூடிய ஒரு பட்டியல் வைத்திருப்பார். இப்படி மணமகன்கள் கண்டிஷன் பட்டியலோடு சுற்றிய காலம்மாறி இன்றோ மணப்பெண்கள் தனக்கு வரப்போகும் வாழ்க்கைத்துணை எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு கண்டிஷன்களை அடுக்கத் தொடங்கியிருக்கின்றனர் என்றால் அது மிகையில்லை. இன்று திருமணம் குறித்த பெண்களின் எதிர்பார்ப்பு முற்றிலும் மாறியிருக்கிறது. திருமண வலைத்தளங்கள் முதல் தனியார் மேட்ரிமோனியல்வரை எல்லா இடங்களிலும் ஆண்களின் ஜாதகங்கள் கொட்டிக்கிடக்க மணப்பெண்களின் தேவை எக்கச்சக்கம் என்று சொல்லப்படுகிறது.

திருமணத்திற்க்கு தயாராக பெண்கள் இல்லாமலும் இல்லை, அப்படியாயின் இதற்குக் காரணம்தான் என்ன? மணப்பெண்களின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துச செல்ல பல்வேறுவகையான தனிப்பட்ட, சமூக காரணங்கள் இருந்தபோதிலும் இன்றைய கட்டுரை ஒரு வித்தியாசமான விடயம்பற்றியே நோக்கவிருக்கிறது. இன்றெல்லாம் பெண்கள் முன்வைக்கும் 'டிமாண்டுகள்' முன்பைக்காட்டிலும் அதிகம். இன்றைய பெண்கள் தம்முடைய தேர்வுகளுள் மிகவும் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கிறார்கள். ஏனெனில் முன்பைப்போல ஓர் ஆணைச் சார்ந்திருக்கும் தேவை அனேக விடயங்களில் பெண்களுக்கில்லை. ஆண்களுக்கு இணையாகப் படிக்கிறார்கள் தொழில் புரிகிறார்கள், பொறுப்பான பதவிகளை வகிக்கிறார்கள், கைநிறைய சம்பளம் வாங்குகிறார்கள். தமக்கு என்ன தேவை' என்ற தெளிவு இன்றைய பெண்களுக்கு அதிகமாகவே இருக்கிறது. திருமண விடயத்தில் தமக்கு இப்படித்தான் அமைய வேண்டும் என்று முடிவு செய்து பெற்றோரிடமும், தரகர்களிடமும் கன்டிஷன்களாக வெளிப்படுத்துகிறார்கள். 'இவர்தான் இனி நம் வாழ்க்கை, இன்பமோ துன்பமோ எல்லாமும் இனி இவரோடுதான்' என்று தன வாழ்க்கைத் துணையினை தன் பாதுகாப்பாக நினைக்கும் மனோபாவம் முற்றிலுமாக மாறிவிட்டதெனலாம். இன்றெல்லாம் தம்முடைய வாழ்க்கையில் 'செக்கியூரிட்டி' என்ற ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுதான் பல பெண்கள் திருமணம் செய்துகொள்ளவே தீர்மானிக்கிறார்கள். நல்ல உத்தியோகம், படிப்பு ,சொந்தத் தொழில், சொந்த வீடு என்று இந்த செக்கியூரிட்டி மான இடம் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இன்றைய பெண்களிடம் அதிகம். கணவனின் துணையாக அவன் நிழலில் காணாமல் போய் விடும் ஆபத்தை நினைத்து அச்சப் படுகிரவர்கள் ஏராளம். இரு உள்ளங்களின் கௌரவமான ஒப்பந்தம்தான் திருமணம் என்பதில் தெளிவாக



என்ற விடயம் அவரவர்க்கேற்ப மாறுபடுகிறது. பெரும்பாலான பெண்கள் திருமணத்தை தள்ளிப் போடச் சொல்லும் காரணமும் இந்த 'செக்கியூரிட்டி' என்ற ஒன்றுதான் என்று சொல்லலாம். மேலும் ஒரு பெண் தனக்கு இணையாகவோ , தன்னைவிட அதிகமாக படித்த, தன்னைவிட அதிகம் சம்பளம் வாங்குகிற, உயர் பதவி வகிக்கிற ஒரு ஆணையே திருமணம் செய்துகொள்ள விரும்புவதும் சகஜமாகியுள்ளது. அதுமட்டுமன்றி ஒத்த சிந்தனை உள்ளவர்களாக இருப்பதும் அவசியம் என்று எதிர்பார்க்கவும் செய்கிறார்கள்.

தன்னுடைய திருமண வாழ்வில் தனக்கென்று ஒரு தனித்துவ



பிரியா இராமநாதன்
(இலங்கை)

இருக்கும் பெண்கள், கணவனாக வருபவன் எல்லாவிடயங்களிலுமே தம்மை அடக்கியாள முட்படுவானோ என்ற அச்சத்தில் யோசிப்பதும்கூட திருமணங்களை நொண்டிச் சாக்குச் சொல்லி தள்ளிப்போடவும் காரணமாகிறது. தன்னைவிட ஓரிரண்டு வயது அதிகமான அல்லது சம வயதுடைய ஆண்களை பெண்கள் திருமணம் செய்துகொள்ள விரும்புவதும் இந்தக் காரணத்தால்தான். ஏனெனில் அதிக வயது இடைவெளி ஒரு ஆண் தன்னை கட்டுப்படுத்த, ஆதிக்கம் செலுத்த அடிகோலும் என்ற எச்சரிக்கையுணர்வு. சரி திருமணத்துக்கு ஏன் இவ்வளவுகண்டிசன்கள்? இதற்க்கான முக்கிய காரணம் பெண்களுக்கு இன்று ஏற்ப்பட்டிருக்கும் உலக அனுபவம். பல பெண்கள் உணர்ச்சிவசப்பட்டோ, பெற்றோர் வற்புறுத்தலாலோ திருமணம் செய்துகொண்டு மனக்குறையுடன் வாழ்வதை பார்க்கிறோம். ஒத்த சிந்தனை இல்லாமல், ஆதிக்க மனோபாவத்தை சகித்துக்கொள்ளாமல் விவாகரத்து வரை சென்றுவிட்டால் என்னாவது என்ற பயம் அடிமனதில் இருந்து கொண்டேயிருக்கும் . இதனாலேயே தன்னுடைய 'தேர்வு' சரியாக இருக்கவேண்டும் என்று நிறைய கவனம் எடுக்கிறார்கள். இந்த அதீத எச்சரிக்கையுணர்வே கன்டிஷன்களாக வெளிப்படுகின்றன என்பதுதான் உண்மை.

சக அலுவலக தோழிகளின் அல்லது உறவுகளின் வாழ்க்கையில் ஏற்ப்படும் திருமணப் பிரச்சினைகளை, சிக்கல்களைப் பார்த்தே திருமணத்தை தள்ளிப்போடும் அல்லது தவிர்க்கும் பெண்களும் இல்லாமல் இல்லை. இங்கே இன்னுமோர் முக்கியமான விடயம்தனையும் குறிப்பிட விரும்புகிறேன், பெண்களுக்கு திருமணம் போன்ற விடயங்களில் முடிவெடுக்கத் தெரியாது என்ற எண்ணம் இன்னுமே பல பெற்றோரிடம் இருந்துவருகிறது. பெண்களின் இதுபோன்ற கண்டிசன்கள், எதிர்பார்ப்புக்கள் வீண் குழப்பத்தினையே ஏற்ப்படுத்தும் என்ற கருத்து பெற்றோரிடம் இருக்கிறது. அவர்களைப் பொருத்தவரையில் பெண்களுக்கு விபரம் போதாது, தங்கள் மகள்கள் இன்னுமே சின்னக் குழந்தைகள்தான் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் யதார்த்தநிலை அப்படியல்ல. பல பெண்கள் மிகத் துணிவுடன் தங்கள் கணவர்களை தேர்வு செய்கிறார்கள்.

28 ஆம் பக்கம் பார்க்க...





Martha Rivero-Garrido
தமிழாக்கம் : கவிதா லட்சுமி
(நோர்வே)

# அவளைக் காதலிக்காதீர்கள்...

வாசிப்பை வழமையாகக் கொண்ட
பெண் மீது காதல் வயப்படாதீர்கள்.

உணர்வுகளை ஆழமாக
அனுபவிக்கத் தெரிந்த,
எழுதவும் கூடிய பெண்ணுடன்
காதல் கொள்ளாதீர்கள்.

கற்கையை
வழிமுறையாக்கியவளிடமும்
மாயம் செய்யும்
உன்மத்தப் பிச்சி ஆனவளிடமும்
சிந்திக்கத் தெரிந்தவளும்,
தன்னை அறிந்தவளும்,
சிறகு விரித்தெழும் வித்தைக்காரியும்,
மனவுறுதியும் கொண்டவளுமான
பெண்ணுடன் காதல் வயப்பட்டு
விடாதீர்கள்.

காதலின் உச்சத்தில்
சிரித்துக் கொண்டிருப்பவளிடமோ
கண் கலங்கிப் போகுபவளிடமோ
காதல் கொண்டு விடாதீர்கள்.

உடலையே உயிராக்கத்
தெரிந்தவளிடம்,
கவிதைகளைக் காதலிப்பவளிடம்
(இவளே அனைத்திலும்
பேராபத்தானவள்),
ஒரு ஓவியத்தில் அமிழ்ந்து
போக்கக் கூடியவளிடம்,
இசையின்றி வாழ்வில்
இயையாதவளிடம்,
காதலுற்று விடாதீர்கள்.


அரசியல் ஆர்வமுள்ளவளிடம்,
அநீதிகளுக்கெதிராய் நிற்கத்தெரிந்த
கலகக்காரியிடம்
காதல் வயப்படாதீர்கள்.

தொலைகாட்சியில் தன்னை
இழக்காதவளும்,
உடலழகைக் கடந்த பேரழகு மிளிரும்
பெண்ணுடன்
காதல் கொண்டுவிடாதீர்கள்
தீவிரமும் தெளிவுமுள்ள
அலட்சியப் பேர்வழியான
ஒரு குறும்புக்காரியை
காதலித்து விடாதீர்கள்.

இப்படிப்பட்ட பெண்ணிடம்
காதல் வயப்படுவதை
நீங்கள் விரும்பவும் மாட்டீர்கள்.

ஒருவேளை அவள் மீது நீங்கள்
காதல் கொண்டு விட்டீர்களெனின்...

அவள் உங்களோடு
இருக்கின்றாளோ இல்லையோ...
காதல் செய்கிறாளோ இல்லையோ...
அந்தப் பெண்ணிடமிருந்து
உங்களை மீளப் பெற
முடிவதேயில்லை.



# எனக்கு ஒரு விருப்பு கௌதமா!

வெட்டுக்கிளிகள் பற்றிக்
கதைகள் சொல்லும்
ஆதிவாசி

தேநீர்க் காலங்களோடு
அடிவான வர்ணங்களைக்
குழைத்து விளையாடச்
சித்திரக்காரன்

தொலை பயணங்களில்
பிரபஞ்சத்து வெளிகளோடு
கண்களில் சிறகணியும்
கந்தர்வன்

இடிந்த அரண்மனைகளதும்
உடைந்த சிற்பத்தினதும்
கதைகளைப் பேசித்திரியும்
ஆதி உயிர் பின்
நவீனத்துவத்திற்குப் பின்
என்ன என்பதைப் பேசி
முரண்பட்டு ஓயுமொரு
தோழமைக்காரன்

சுதந்திரம் நிறைந்த வாழ்க்
கையில்காதலோ
அல்லால் காதல்
செழித்த வாழ்க்கையில்
சுதந்திரமோ காண
வாழ்வுப் பெருங்கலைஞன்

கண்ணியங்களையும்
மரியாதை
நிமித்தங்களையும்
கடந்து
மனத்துகள்களில்
பேரண்டம் செய்யவும்
மென்அம்பெய்து
கொல்லவும்
உரிமைக்காரன்!
மாறன்!

இவையெல்லாம்
பேராசைச் சொப்பனங்கள்
என்றால்..

அதற்கென்ன?
இவை எனது!

கவிதா லட்சுமி
(நோர்வே)




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

Dr.IN

# குருதிச்சோகை எதனால் ஏற்படுகிறது? அது குணமாக்கக் கூடிய நோயா?





குருதிச்சோகை ஏற்படுவதற்கு காரணங்கள் பல. குருதிச்சோகை நிச்சயமாகக் குணப்படுத்தக் கூடியதே. அது ஏற்பட்ட காரணத்திற்கு ஏற்ப சிகிச்சை முறைகள் மாறுபடும். குருதியில் ஏற்படும் நோய்களை எடுத்துக் கொண்டால் குருதிச் சோகை தான் மிகவும் அதிகமாகக் காணப்படும் நோயாகும். வறுமை மற்றும் போசாக்கிமைதான் இது ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். இருந்தபோதும் வேறு பல காரணங்கள் உள்ளன. அவற்றை பின்னாடி பார்க்கலாம்.

குருதிச் சோகை என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். குருதிச் சோகை என்பது ஒரு வரது இரத்தத்தின் செறிவு குறைவதாகும். எமது குருதிப் பாயத்தினுள் பல வகையான கலங்கள் உள்ளன. அதில் செங்குருதிக் கலமும் ஒன்று. இரத்தத்தின் செந்நிறத்திற்குக் காரணமாக இருப்பது இந்த செங்குருதிக் கலங்களேயாகும்.

இக் கலங்களின் உள்ளே ஹீமொகுளோபின்(Hb) என்ற புரதம் உள்ளது. ஹீமொகுளோபின் ஆனது இரும்புக் கனியத்தை பிரதானமாகக் கொண்டுள்ளது. குருதியில் செங்குருதிக் கலங்களின் எண்ணிக்கை குறைவது அல்லது அதிலுள்ள ஹீமொகுளோபினின் செறிவு குறைவதாலேயே இரத்த சோகை எற்படுகிறது. இது ஏன் எற்படுகிறது என்ற நோக்கினால் வறுமைப்பட்ட நாடுகளில் போசாக்கற்ற உணவினால் குருதி உற்பத்திக்கு தேவையான இரும்புச் சத்து மற்றும் விற்றமின்கள் கிடைக்காமையே முக்கிய காரணமாகும். ஆயினும் வளரச்சியடைந்த நாடுகளிலும் இது ஏற்படுதற்கு காரணம் வறுமையல்ல. தவாறன உணவுப் பழக்கம் ஆகும். காய்கறி பழவகைகள் மீன் போன்றவற்றை உட்கொள்ளாது நொறுக்குத் தீனிகளால் வயிற்றை நிரப்புவதாலேயே அவர்களுக்கு இந் நோய் எற்படுகிறது.

பசிய இலை கீரை வகைகள், பருப்பு பயறு, சோயா பீன்ஜ், இறைச்சி மீன் ஈரல், போன்றவற்றை போதியளவு உணவில் சேர்த்துக் கொண்டால் இரத்த சோகை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.




## குருதி இழப்பு

குருதிச் சோகைக்கு மற்றொரு முக்கிய காரணம் குருதி இழப்பாகும். நாளாந்தம் நடக்கும் பல குறைந்தளவான குருதி இழப்புகள் நோயாளியின் கவனத்தை ஈர்ப்பதில்லை. ஆனால் நீண்ட நாட்களாக தொடரும் குறைந்த அளவான குருதி இழப்பு படிப்படியாக இரத்தசோகையை ஏற்படுத்தும்.

உதாரணமாக மூலநோய் காரணமாக சிலருக்கு நாளந்தம் அல்லது அடிக்கடி குருதி மலத்துடன் வெளியேறக் கூடும். குறைந்த அளவில் வெளியேறும்போது பலருக்கு அது வெளிப்படையாகத் தெரிவதில்லை. ஆனால் நாளடைவில் இரத்தசோகையை ஏற்படுத்தும்.

இதே போல, குடற் புண் உள்ளவர்களுக்கும் எமது கண்களுக்குப் புலப்படாது சிறிய அளவில் தினசரி குருதி வெளியேறுவதால் காலப் போக்கில் இரத்த சோகை ஏற்படும். சிலர் வலி நிவாரணி மாத்திரைகளை

24 ஆம் பக்கம் பார்க்க...



# கடைசி வரை அற்புதங்கள் ஏதும் நிகழவில்லை

வெளியாருக்காகக்
காத்திருப்பு
பயிரை மேய்கின்ற
வேலிகள்
கைநழுவித் திசைவழுவிக்
கரைகின்ற காலங்கள்

வாக்கு
அறுவடைகளுக்கும்
செயலுக்குப் போகாத
சேனைகளுக்கும்
உணர்ச்சிக்
கோஷங்களுக்கும்
முதலீடாக
ஆக்கப்பட்டுள்ள
தசாப்தங்களின்
தியாகங்கள்

விடுதலைக்காக
உயிரும் உடலும்
எல்லாமும் விதைத்தும்
பாலையாய் எங்கள் நிலம்

இழந்த உரிமைகளைக்
கோர மட்டுமல்ல
இறந்த உறவுகளை
நினைவு
கூரவும் தடை
இறுமார்ந்திருக்கிறது
வெற்றிவாத இழியுகம்

நினைவழிப்பு முனைகளை
இயன்றவரை
மழுங்கடித்தபடி
இழப்பின் வலி
உணர்ந்த மக்கள்

வேள்வியின் சாட்சியாய்
மரணங்கள்
கனவுகளின் நீட்சியாய்
நினைவுகள்

திண்ம இருளிலும்
நம்பிக்கைகள் மட்டும்
தீபங்களின் வடிவில்
மீதமிருக்கின்றன

வாக்கு வேட்டைக்கு
விதையாவதை
கோஷங்களுக்குப்
பயிராவதை
செயலுக்குப் போகாத
சேனைகளுக்கு
இரையாவதை
பார்த்துக்
கொண்டிருந்தால்..

மீதமிருப்பவையும்
விற்கப்படும்
பின்.
அற்புதங்கள் ஏதும்
நிகழப்போவதில்லை

ரூபன் சிவராஜா
(நோர்வே)






அரும் பொருட்காட்சியகம்





கந்தபுராண ஆச்சிரமம்

# மணி விழாக்காணும் சிவபூமி மைந்தன் கலாநிதி ஆறு.திருமுருகன்!



# ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல!!!

**வெற்றிமணி**
**மு.க.சு.சிவகுமாரன்**
**(யேர்மனி)**

**தாய்வீடான** அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஆன்மீக உள்ளத்தை பண்படுத்தியதைச் சொல்லவா! சிவபூமி கொடுத்த நல் வரங்களைச் சொல்லவா! நாய்களுக்கும் சரணாலயம் அமைத்த ஜீவகாருண்யத்தை சொல்லவா! ஆறு போல் ஓடும் ஆறு.திருமுருகனின் அழகிய நீண்ட சொற்பொழிவுப் பயணங்களைச் சொல்லவா!

திரு முருகா! எதனைச் சொன்னாலும் மலைபோல் உன்பணியில் ஏதும் ஒன்றேனும் சொல்லாது விடும் அளவிற்கு உன்பணிகள் குவிந்துள்ளது.

புள்ளிபோட்டு குறித்த பணிமுடிக்கும் உன் ஆற்றலுக்கு இல்லாத ஒன்று முற்றுப் புள்ளி மட்டும்தான். சிவபூமி முதியோர் இல்லம். சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, திருவாசக அரண்மனை,அரும் பெரும் காட்சியகம். கந்தபுராண ஆச்சிரமம், அபயம் இலவச மருத்துவ சேவை,சிவபூமி கோசாலை, இப்படி தொடரும் உன் சேவை அதனால்தான் சொன்னேன் உனக்கு முற்றுப்புள்ளி கிடையாது என்று.


பெற்றோர்

வடக்கு நோக்கி மட்டுமல்ல,கிழக்கிலும் உதிக்கும் உன் பணிகள். நீ பிரதேசங்களுக்கு அப்பாற்பட்டவன். அரசியல் சாயம் பூசாத திருநீறு அணிந்த தூய நெற்றிக்கும் சேவைக்கும் சொந்தக்காரன். அறப்பணியாளன் ஆறு திருமுருகன். அறுபது வயது யாவருக்கும் வருவதுதான், சிலருக்குத்தான் மணிவிழாவாக மணியோசை கேட்கும். சிவபூமி மைந்தனே எடுத்தகாரியத்தை அவனருளோடு செய்து முடிக்கும் வெற்றி வேலனே! செஞ் சொற் செல்வரே ஆறு.திருமுருகனே!


சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன்

வெற்றிமணி பத்திரிகையும், சிவத்தமிழ் சஞ்சிகையும் இணைந்து, உங்கள் பணிகள் என்றும் தொடரவும், வாழ்வு அருள் ஒளியால் பிரகாசம் பெற்றிடவும், மணிவிழாப் பொழுதினில் வாழ்த்தி வணங்குகின்றது.


இரண்டாம் வகுப்பு மாணவனாக திருமுருகன்

உங்களை பெற்றவர்கள் மட்டும் அல்ல, எங்களைப் பெற்ற சிவபூமியும் உங்களால் பெரும் பேறு பெற்றது என்பதும் உண்மையே!

**அன்புடன்**
**மு.க.சு.சிவகுமாரன்**
**பிரதம ஆசிரியர்: வெற்றிமணி-**
**சிவத்தமிழ்- யேர்மனி. 20.05.2021**

★ முழுப்பெயர் - ஆறுமுகம் திருமுருகன். தந்தை - ஆசிரியர் திரு. கந்தையா ஆறுமுகம். (பிறந்த இடம் - கோப்பாய்) தாய் - ஆசிரியை திருமதி. ஆறுமுகம் சரஸ்வதி. (பிறந்த இடம் - இணுவில்) பிறந்த திகதி - 28.05.1961 , வைகாசி விசாகம்.

★ ஆரம்பக்கல்வி இராமநாதன் கல்லூரி, இடைநிலைக்கல்வி - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. பட்டப்படிப்பு - பேராதனைப்பல்கலைக்கழகம். பட்டப்பின் படிப்பு - தேசிய கல்வி நிறுவகம்.

**கல்விப்பணி**

★ 1989 - ஆசிரியர் சேவையில் சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை- 1993 - ஸ்கந்த வரோதயக் கல்லூரி - சுன்னாகம் - வகித்த பதவிகள் முறையே ஆசிரியர், பகுதித்தலைவர், உப அதிபர், பிரதி அதிபர். 2008 - அதிபர் (16.03.2008 இலிருந்து 28.05.2012 வரை)

★ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் உறுப்பினராக 1995ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். 32 வருடங்களுக்கு மேலாக தேவஸ்தான தலைவராக உன்னத பணியாற்றிய சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் இழப்புக்குப்பின் ஆறு.திருமுருகன் அவர்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவராக 29.06.2008இல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். இன்று வரை அவர் பணி தொடர்கிறது.



**யேர்மனியில் இருந்து வெளிவரும் சிவத்தமிழ் ஆன்மீகச் சஞ்சிகை 2005ஆம் ஆண்டு தைமாதம் 07ம் திகதி சிவத்தமிழ்ச் செல்வியின் முத்துவிழாவின் போது சிவத்தழிழ் சிறப்பு மலரை தாயகத்தில் அவர் முன்னிலையில் வெளியிட்டு மகிழ்ந்தது. அவ் வேளை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் மற்றும்பேராசிரியர்கலாநிதி அ.சண்முகதாஸ்செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிவத்தமிழ்ச் செல்வி செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் ஆகியோரைக் காணலாம்.**




# ‘கண்ணாடி வார்ப்புகள்’ - 1978




● ஆனந்தராணி பாலேந்திரா (UK)


**யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ‘கண்ணாடி வார்ப்புகள்’ ஒரே நாளில் இரண்டு மேடையேற்றங்கள்! கண்டு சாதனை!!!**

கடந்த இதழில் நான் நடித்த ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தின் கதையின் ஒரு பகுதியை விபரித்திருந்தேன். உடல் ஊனம் காரணமாக தாழ்வுமனப்பான்மை கொண்டு வெளியுலகைக் கண்டு அஞ்சும் இளம்பெண்ணான லோரா தனது வீட்டிற்கு தன்னைப் பெண் பார்க்க வந்திருந்த, தன்னோடு கல்லூரியில் ஒன்றாகப் படித்தவரும், தனது சகோதரனுடன் ஒன்றாக வேலை பார்ப்பவருமான ஜிம்முடன் உரையாடிக் கொண்டிருக்கிறார். ஜிம்மிற்கு தான் பெண் பார்க்கத்தான் போகிறேன் என்பது தெரியாது. கல்லூரி காலத்தில் ஜிம் மீது லோராவிற்கு ஒரு ஈர்ப்பு இருந்தது.

லோரா தனது தாழ்வுமனப்பான்மையில் இருந்து விடுபட்டு கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்துவரும் நேரத்தில், ஜிம் தன்னுடைய காதலி தனக்காகக் காத்திருப்பார், தான் உடனே போகவேண்டும் என்று கூறிச் செல்கிறார். கண்ணாடி போன்ற லோரா உடைந்து போகிறார். அம்மாவுந்தான். ஏமாற்றமும் சோகமும் ஆத்திரமுமாக அம்மா மகன் ரொம்மோடு சண்டை போடுகிறார். தன்னில் எந்தக் குற்றமும் இல்லையென்று வாதிடும் ரொம், தனது தந்தையைப் போலவே, வீட்டைவிட்டு நிரந்தரமாக வெளியேறுகிறார்.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தில் நான் ஏற்று நடித்த மகள் ‘லோரா’ பாத்திரம் எனக்கு மிகவும் சவாலான பாத்திரமாக அமைந்தது. நான் நடித்த முன்னைய நாடகங்களில் எனது பாத்திரம் மிக உறுதியான, எதையும் தைரியமாக எதிர்நோக்குகின்ற ஒரு பெண் பாத்திரம். ஒருவிதத்தில் எனது இயல்பான குணமும் தான். ஆனால் லோரா பாத்திரம் இதற்கு நேர்மாறாக இருந்தது. மிகவும் மென்மையான பேச்சு, மென்மையான அசைவுகள், தாழ்வுச்சிக்கல் என இந்தப் பாத்திரத்தில் நடிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு அதனை உள்வாங்கி நடித்தேன்.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தில் ஜிம் [விருந்தாளி] பாத்திரத்தில் ஜெரால்ட் ஜெயராஜா நடித்தார். அப்போதுதான் அவர் எனக்கு அறிமுகமானார். ஜெரால்ட் கொழும்பில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். 1978 ஜனவரி நடுப்பகுதியளவில் நானும் ஜெரால்ட்டும் நடிக்கும் காட்சிக்கான ஒத்திகைகள் கொழும்பில் ஆரம்பமாகின. அந்த நேரங்களில் இலங்கை வானொலி நாடக ஒலிப்பதிவுகளுக்காக நான் அடிக்கடி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வது வழக்கமா இருந்தது. அந்தக் காலத்தில் மிக இளம்பெண்ணாக தனியே கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமாக ரெயினிலும் பஸ்ஸிலும் அடிக்கடி பயணித்திருக்கிறேன். இப்போது நினைத்துப் பார்க்கும் போது எனது தைரியம் எனக்குப் பிடித்திருக்கிறது.



நானும் ஜெரால்ட்டும் நடிக்கும் காட்சி ஒன்று கிட்டத்தட்ட அரை மணித்தியாலம் நாடகத்தில் வரும். அந்தக் காட்சியின் ஒத்திகைகள் பெரும்பாலும் கொழும்பிலேயே நடந்தன. பாலேந்திரா மகன் ரொம் பாத்திரத்தில் நடித்தார். பாலேந்திராவும் கொழும்பிலேயே வேலை செய்து கொண்டிருந்தார்.

ஜெரால்ட் நல்ல நகைச்சுவை உணர்வு கொண்டவர். கலகலப்பாகப் பழகுவார். அந்த அரைமணி நேரக் காட்சியில் நாம் இருவரும் ஒரு பத்து நிமிடம் நிலத்தில் இருந்தபடி நடிக்கவேண்டும். பின்பு எழும்பும்போது மிக லாவகமாக எழும்பி நிற்கவேண்டும். ஜெரால்ட் ஆறு அடிக்கு மேல் உயரம் இருப்பார். அவர் சப்பாணி கட்டி இருப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டார். அது சரிவந்தால் எழும்புவது பிழைக்கும். எனக்கு ஒரே சிரிப்பாக இருக்கும். பாலேந்திராவும் விடமாட்டார். மிக முயற்சி எடுத்து இறுதியில் நல்ல அநாயாசமாக நடித்தார்.

நான் நடித்த ‘நட்சத்திரவாஸி’ நாடகத்தை 1978 மார்ச் மாதத்தில் கொழும்பு மற்றும் பேராதனையில் மேடையேற்றும்போது ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தில் தாய் அமென்டா பாத்திரத்தில் நடிப்பதற்கு ஒருவரைக் கண்டுபிடித்துவிட்டேன் என்றும் அவருடனான ஒத்திகைகளை விரைவில் ஆரம்பிக்கவிருப்பதாகவும் பாலேந்திரா என்னிடம் கூறினார்.

அந்த ஒத்திகையின் போதுதான் நான் முதன் முதலாக நிர்மலாவை சந்தித்தேன். அப்போது அவர்தான் ‘நட்சத்திரவாஸி’ நாடகத்தில் இடம்பெற்ற பின்னணி இசைக்குப் பாடியவர் என்பதைத் தெரிந்து கொண்டேன். நிர்மலா என்னை விட சில வயதுதான் மூத்தவர். ஆனால் அம்மா பாத்திரத்தில் நடித்தார். நிர்மலாவுடன் சேர்ந்து நடிக்கும் காட்சிகளின் ஒத்திகைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின. ஒத்திகைகளின்போது நடித்துப் பார்க்கையில் நாடகப்பிரதியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டது. இதில் நிர்மலா பங்களிப்புச் செய்தார். நிர்மலாவிற்கு இதுதான் முதலாவது நாடகம். தாய் பாத்திரத்தில் மிக நன்றாக நடித்தார். அந்தப் பாத்திரம் அவருக்கு நன்றாகப் பொருந்தியது. ஒத்திகைகளின்போதும் நாடக மேடையேற்றங்களின் போதும் நன்கு ஒத்துழைத்தார்.

பாலேந்திரா ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் நாடக ஒத்திகைகளுக்காக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவார். ஜெரால்ட்டும் சில சனி–ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணம் வந்து ஒத்திகைகள் நடக்கும். சில வார நாட்களில் நான் கொழும்பு சென்று ஒத்திகைகள் பார்த்தேன். அப்போது நான் வேலை செய்ய ஆரம்பித்திருக்கவில்லை.

‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகத்தில் நான் ஏற்று நடித்த லோரா பாத்திரத்திற்கான உடைகள் எப்படி இருக்க வேண்டும் என்று பாலேந்திரா சொன்ன தற்கமைய நானே அந்த உடைகளைத் தைத்துக் கொண்டேன். நாடகத்தின் இரண்டாவது பகுதியில் நான் அணிந்த வெளிர் மஞ்சள் நிற நீண்ட ஆடையை இப்போதும் சிலர் நினைவில் வைத்து என்னிடம் கூறுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கும்.

நீண்ட ஒத்திகைகளுக்குப் பின்னர் 09–06–1978 அன்று ‘கண்ணாடி வார்ப்புகள்’ நாடகம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியது. கிட்டத்தட்ட இரண்டு மணித்தியால நாடகம் இது. நடுவில் ஒரு சிறிய இடைவேளை. பகல் காட்சி, மாலைக் காட்சி என இரண்டு மேடையேற்றங்கள் அதே தினத்தில் நடைபெற்று ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

மிகுதி அடுத்த இதழில்...





# நிகழ்காலக் கல்வியும் நிலைத்தடுமாறும் பெற்றோரும்



மாலினி மோகன்
(கொட்டகலை, இலங்கை)

சமக்காலாத்தல் கல்வியானது அத்தியாவசியமான தேவையாக ஆளுமையுடன் இணைய வடிவில் உருவெடுத்துள்ளது. தற்கால கற்றலை இணைய ஊடகங்களினூடாகவே முன்னெடுத்துச் செல்கின்ற கல்வியறிவை வழங்கும் செயற்பாடுகள், நவீன வாழ்க்கையின் முக்கிய செயலாகும்.

கற்றலின் தேர்ச்சி குறிப்பிட்ட அம் மாணவனின் விளங்கிக் கொள்ளும் தன்மையிலேயே தங்கியுள்ளது, மனனஞ் செய்வதில் அல்ல.

தேர்ச்சி பெறுபேறானது பெற்றோரின் ஆசையாகவும் பிள்ளையின் கனவாகவும் இருப்பதைவிட, கல்வியறிவிற்கு முன்னிடமளிப்பது தான் எக்காலத்திற்கும் தேவையானது. மனனம் செய்வதிலும் உயர் பெறுப்பேறு பெறுவதும் தான் கல்வி, என்பதினை கருவாக கொண்ட பெற்றோர்கள் நிலைத்தடுமாறிப் போய் அறிவும், கல்வியும் வெவ்வேறு என்பதனேயே மறந்துப்போய் பரீட்சைப் பெறுபேறே வாழ்க்கையின் தீர்மானம் என அவர்களே தீர்மானித்துள்ளனர்.

பெற்றோரின் நிலைத்தடுமாற்றம் பிள்ளையின் இயல்பான ஆற்றலை முடக்கி தனக்கு இயலாத ஒன்றை வெளிப்படுத்தும் இயந்நதிரமாக செயற்பட்டு, எதைப் எதற்காக படிக்கின்றோம் என்ற கேள்வியை தன்னிடத்தில் தானேக் கேட்டுக்கொள்ளாமல் புத்தகப்பூச்சியாக கல்வியை மனனம் செய்யும் கருத்துப்படிவில் கற்று பெறுப்பேறுகளைப் பெற்று தமது எதிர்கால வாழ்க்கையில், இவ் எண்ணக்கரு தோற்று தமது வாழ்க்கையில் கஷ்ட்டப்படுவர். தொழில் இல்லாத கல்வி நீரின்றி வாடும் மரத்தைப் போன்றது

கல்வியறிவோடு உலகினை பற்றிய அறிவையும் ஏற்றி, விளங்கி, அனுபவப்படலே கற்றலின் அறிவாகும். கற்றலின் மூலம் அறவினையும், அறிவின் மூலம் கற்றலையும் விருத்தி செய்யும் முறை தனது சுற்றுவட்ட வடிவில் பயணிப்பதே அனுபவக்கல்வியாகும், இவ் அனுபவ கல்வியை விளங்கி கற்றலை நாடுபவனே வாழ்க்கையில் வெற்றியடைகின்றான், வெறுமனே அனுபவத்தையும் மனனம் செய்பவன் அல்ல.

விளங்கிக் கொள்வதே கல்வி என பெற்றோர் உணரும் தருனம் நீண்ட தூரத்திலும், தூரமான நோக்குடனும் இருப்பதே தவறு. நவீனமயத்திற்கு உள்ளாகியுள்ள தற்போதய உலகத்தின் தேவையிலுள்ள விருப்பங்கள் கல்வியினுள் பல தேர்வுகளை உள்ளடக்குக்கின்றது. பெற்றோர் பிள்ளைக்கிடையிலான தலைமுறை இடைவெளியின் உறவானது பாம்பு கீரி உறவிற்கு ஒப்பானது. இரு வெவ்வேறு காந்த துருவங்கள் போல் கருத்துக்கள் கொண்ட பெற்றோர்களும் பிள்ளைகளும் கல்வி போர் ஒன்றினை எதிர் நோக்குக்கின்றனர்.

இலங்கையில் மலையக மக்களின் கல்வித்திறன் இப்போதுதான் ஒரு உன்னதமான திசையைநோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளது. இந்த தாமதத்திற்கு மாணவர்கள் எவ்விதத்திலும் பொறுப்பானவர்கள் அல்ல. பெற்றோர் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி வேலைக்கு அனுப்பியதும்,அரசவழிகாட்டலில் உள்ள உதாசினங்களுமே காரணமாகும். இன்று மலலையக மாணவர்கள் விழித்துக் கொண்டனர்.

இந்நேரத்தில் சமகாலத்தில் பிள்ளை யின் தேவையை [விருப்பங்கள் அல்ல] பிள்ளை உணரும் கட்டத்தில் அதனை ஆராய்வு செய்து வழிநடத்துவதே பெற்றோரின் கடமையே தவிர தமது விருப்பத்தினை திணிப்பது அல்ல. கல்வியே அறிவு என உணரும் பிள்ளையின் பெறுபேறு, சித்தி. அறிவே கல்வி என உணரும் பிள்ளையின் பெறுபேறு, வாழ்க்கை சித்தி!

**"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"**



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மலையக தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் மூலிகைகள் கலந்த கொதிநீரில், நீராவி பிடிக்கும் செயற்பாடு ஹொரண கம்பனியின் கீழ் இயங்கும் லிந்துலை மவுசால்ல தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. தொழிலாளர்கள் தினமும் காலையில் கடமைக்குச் செல்லும் முன்னர் மூலிகைகள் கலந்த நீராவியை பிடித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

K.K.L.
Textilien Schmuck Haushaltsware
Rheinische str.56 44137 Dormund Tel: 0231 96 98 6610

யேர்மனி கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 2021
Sri Naagapoosani Ambaal Hindu Tempel Krefeld Germany
19.06.2021 சனிக்கிமை முதல் 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை வரை
யேர்மனி கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகாவுற்சவம் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் அருளால் கொடியேற்றத்துடன் 19.06.2021 சனிக்கிமை ஆரம்பமாகி தேர் 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
(தற்போது Covid 19 காரணமாக ஆனிமாதம் கொடி 19.06.2021 தேர் 27.06.2021 திகதி வரை யேர்மனி அரசு அந்த நேரத்தில் விதிக்கும் ஒழுங்கு விதிமுறைகளைப் பின்பற்றி நடப்போம் என்பதனையும் கருத்தில் கொள்வோம்.)
ஸ்ரீ நாகபூசணி அம்பாள் அருள் பெற்றிட அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்...
கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்
Tel: 02151 565 0045 | Girmesgath Str . 95 | 47803 Krefeld/ Germany







# எத்தனை கோடி இன்பம் வைத்தாய் 06

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

காண்பதும், கருதுவதும், நித்தம் சிந்திப்பதும், வந்தனை செய்வதும், வாக்கும், செயலும் யாவும் நடனம் நடனம் நடனம் என்று ஊனும் உளமும் கலை வாசம் வீச வாழ்ந்து கொண்டிருப்பவர் 'பத்மபூஷன்' பேராசிரியர் C.V,சந்திரசேகர் அவர்கள்.

நிருத்தத்தின் வன்மை இவர் புறம். அபிநயத்தின் மென்மை இவர் அகம். உண்மை, திண்மை, ஒண்மை , உயர் வண்மை இவரது அணிகலன்கள். கலை விரும்பிகளின் கவனத்தை ஈர்க்கவல்ல வல்லமை நிறைந்த கலைஞனாக திகழும் இவரது உத்தமோத்தம கலைப் பயணம் என்பது நடனத்தை பயில்வோர்க்கு உத்வேகத்தை தரவல்லது.

மந்தமாருதம் வீசும் மலையோர ஹிமாச்சல பிரதேசத்தில் சிம்லா என்னும் ஊரில் 1935 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி வைதீகம் மாறாத தமிழ் பிராமண குடும்பத்தில் ஏழாவது குழந்தையாகப் பிறந்து சிம்லாவிலும், டெல்லியிலுமாக பாலனாய் காலம் கழித்தார்.

1945 ஆம் ஆண்டு கலாக்ஷேத்ரா எண்ணும் புண்ணிய பூமியில் காலடி எடுத்து வைத்து மறவோனாய் திறம் வளர்த்தார். 9 வருடங்களாக ஓயாது பதமாடி, இசைபாடி இசை, நடனம் இரண்டிலும் ஒரே மேடையில் பட்டம் பெற்று கலாக்ஷேத்ராவில் முக்கிய இடம் வகித்தது மட்டும் இன்றி கலைக் காதல் கொண்ட காளை, தாவரவியலில் முனைவர் படிப்பினையும் தொடர்ந்தார்.

டெல்லியில் குரு லலிதா அவர்களிடமும் பிர்ஜு மகாராஜ் அவர்களிடமும் நாட்டியம் கற்றுக்கொண்ட கலைமகளை சந்திரசேகர் அவர்களின் வாழ்வின் துணையாக்கி கொள்ளும் அழகியலை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுத்தனர். 1962 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்த கலைத் தம்பதிகளுக்கு சித்திரா [ 1963 ] , மஞ்சரி [ 1967 ] என இரு பெண் குழந்தைகள் கலை

## அறிவான தனிச் சுடர் நான் கண்டேன் அதை ஆடலுலகென நான் கண்டேன்!



வாரிசுகளாக வரமானது.

நாட்டியம் ஜீவ பயணம் என உணர்ந்து பரோடா பல்கலைக் கழகத்திலும், பனாரஸ் இந்து பல் கலை கழகத்திலும் விரிவுரையாளராக கடமையாற்றி ,ஆற்றுகைப் பீடத் தலைவராகவும் பணியாற்றினார். பயிற்சி பட்டறைகள் , கருத்தரங்குகள், விரிவுரைகள் என்பன மட்டும் அன்றி,இளங்கலைஞர்களும் வெட்கப்படும் அளவு அனைவரும் வியந்திடும் ஆற்றுகைக் கலைஞராக தனது 80 வயதுகளிலும் இருபது போல் ஆடினார். அரங்கில் அரனே வந்து ஆடுகிறானோ என அவையோர் சொக்கிட எண்ணற்ற ஆற்றுகைகளை வழங்க, ஜெயா அவர்கள் நட்டுவாங்கம் இசைத்தார்கள். 7 தசாப்தங்களாக ஆற்றுகைக் கலைஞராக இருந்த சிறப்புக்கு உரியவர் எனில் மறைமுகமாக அவரது வாழ்வி



யல் நன்னெறியைக் காணலாம்.

ஐரோப்பிய, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஹாங் காங்,சிங்கப்பூர், இலங்கை, மலேசியா, தாய்லாந்த், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, கம்போடியா , லாஸ், குவைத், மொரிசியஸ், ரீயூனியன், அவுஸ்திரேலியா, சுவிசலாந்து போன்ற பல நாடுகளுக்கு பயணித்துள்ளார். குறிப்பாக இப்பயணங்கள் அவரது எழுபதுகளில் தான் பெரும்பாலும் அமைந்தன.



1978 – உத்தர பிரதேச சங்கீத நாடக அகாடமி விருது, 1982 – குஜராத் சங்கீத நாடக அகாடமி விருது,1993 – சங்கீத நாடக அகாடமி விருது, 2003 – தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் , 2008 – காளிதாஸ் சமன் – மத்திய பிரதேச அரச விருது, 2011 – இந்திய குடியரசின் உயர் விருதான பத்ம பூஷன், 2016 – சங்கீத நாடக அகாடமி விருது, பரத முனி – நாலந்தா மஹா வித்யாலயா மும்பாய், நிருத்ய சூடாமணி – கிருஷ்ணா கான சபா, நாத ப்ரஹ்மம் – நாரத கான சபா, நிருத்ய ரத்னாகர – பைரவி நுண்கலைமன்றம் கிளீவ்லாந்து, நிருத்ய கலா ரத்னா – மைசூர். பரத கலா சாகர – நிருத்யாலயா, நிருத்யோதயா விருது இன்னும் பல பல என இவர் பெற்ற பட்டங்கள் பட்டியல் நீளும்.

உலகம் முழுவதிலும் இருந்து அவரிடம் நடனம் பயில ஆர்வம் கொண்டு சென்னை வந்தடைந்தாலும் , தன்னிடம் கற்க வேண்டும் எனில் அதற்கேற்ற தரத்தினையும் எதிர்பார்ப்பார். ஸ்வர ஞானமும், லய ஞானமும் அடிப்படையாக இருக்கு வேண்டும் அவரது இல்லத்தில் குடும்பத்தினரிடம் மட்டும் அல்ல மாணவர்களிடத்தும் பண்பாடு கலாச்சாரம் காக்கப்படுகிறது.

நடனம் பயில்வதற்கு உரித்தான ஆடை [சேலை,வேஷ்டி] அணிந்தே பயிற்சி பெற வேண்டும் என்பது அங்கு கட்டாயமானது. கோலத்தை மிதிக்காமல் உள்ளே நுழைய வேண்டும், வாசல் கதவு மணி அடிப்பதிலும் நயம் வேண்டும், ஆடை கசங்காமல் அழகாக கட்டப்ப பட வேண்டும். பெண்களாயின் தலை வாரிப் பூச்சூடிப் பொட்டு வைத்து வளையல் கழுத்தணி போட்டு லக்ஷணமாக வகுப்பிற்கு வர வேண்டும். மாணவர்களின் நலனில் அதி அக்கறை கொண்டிருப்பார்.

எப்பிறவிப் பயனோ அம்மகானின் காலடியைப் போற்றிடும் வரம் பெற்றேன். பல்லுயிர்களிடத்தேயும் அன்பு செலுத்தும் நுண்ணியர், எந்த பேதமும் இன்றி ஆற்றுகை கலைஞர்களுக்கு ஆதரவு கொடுத்து, இளங்கலைஞர்களை தட்டி கொடுத்து ஊக்கம் கொடுப்பவர். விமர்சனங்கள் எவ்வாறு வழங்க வேண்டும் என்ற இங்கிதமும் இவரிடமே கண்டு ரசித்தேன். பேச்சினியில் இசையும், மூச்சினில் நடமும் என வாழும் இலக்கிய காதலன்.

26 ஆம் பக்கம் பார்க்க...




Sari1 Fashion House
Sari1
எம்மிடம் தங்க நகைகள் மற்றும் மேலதிக சேவைகளும் உண்டு
* ஓடர் நகைகள்
* திருத்த வேலைகள்
* காது மூக்குத்தி குத்துதல்
* பழைய நகைகளுக்கு பதிலாக சிங்கப்பூர் புதிய நகைகள் மாற்றி கொடுக்கப்படும்
தரமான ஆடைகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr. 49
(1. Etage) 60329
Frankfurt am Main
(gegenuber
Hauptbahnhof)
0152 1923 9663
https://www.facebook.com/
sari1fashionhouse
Frankfurt (Main) Hauptbahnhof முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது


New Asialand
ONLINE SHOP NOW
www.newasialand.com
015201954064
மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறி, கடலுணவுப்பொருட்கள்
அனைத்தும் என்றும் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
FRANKFURT (MAIN) HAUPTBAHNHOF முன்பாக 50 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது



# அழகு! இது எங்கு நிர்ணயமாகிறது!

'அழகு'இது பரந்துபட்ட இந்த உலகத்தில் இயற்கையாக விரிந்து கிடக்கிறது. எல்லோரும் தாங்கள் விரும்பும் அழகோடு மெய்மறந்து விடுகிறார்கள். அது நிரந்தரமா?இல்லையா என்பது அவர்களுக்கு அப்போது தெரிவதில்லை.

வாலிபப் பருவத்தில் ஆணோ பெண்ணோ அழகைத் தேடுவதில் ஆர்வம் கொள்வார்கள். இளவயதுச் சினிமா நடிக நடிகைகளின் படங்களை வைத்து ஆராதிக்கிறார்கள். கனவைக்கண்டு நிஜமென அலைவது போல். இதற்குள் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். இந்த சினிமா நடிகர்கள் எல்லோரும் உண்மையில் அழகானவர்களா? எதுவரை இவர்கள் அழகானவர்கள். மாறி,மாறிவரும் நடிகைகள். இதற்குள் என்றும் அடங்குவார்களா?அப்படி என்றால் எப்போதும் ஒரு நடிகையல்லவா இருந்திருக்க வேண்டும்.

அழகென்றால் என்னவென்று என் நண்பனுக்கும் ஒரு சந்தேகம் வந்திருக்க வேணும்,ஒரு நாள் அவனும் நானும் சந்தித்த போது இதைப் பற்றி அலசியிருக்கிறோம்.

ரீஆர் ராஜகுமாரி பானுமதி, பத்மினி, சாவித்திரி, சரோஜா தேவி, தேவிகா என்று எங்கள் காலத்து நடிகைகளில் இருந்து இந்த ஆய்வு நடந்தது. இடையில் புதிதாக வந்த நயந்தராக்களும் அடங்கினார்கள்.



பொன். புத்திசிகாமணி (யேர்மனி)

இந்த உலகம் அழகானது. இதற்குள் அடங்கி இருக்கும் எல்லாமே அழகு.காடழகு,களனி அழகு,வளைந்தோடும் நதி அழகு, மலர் அழகு,மரங்கள் அழகு.பறவைகள், மிருகங்கள் என்று அழகுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனாலும் எப்போதும் ஒன்றை ஒன்று மிஞ்சிக்கொண்டே போகும். இயற்கையை விடுத்து ஏனையவற்றை மறந்து மனிதருக்குள் தேடுவோம் என்று இருவருமே தேடினோம். இந்தத் தேடல் எல்லையில்லாமல் விரிந்து கொண்டே போனது. உண்மையும் அதுதான்.இந்தப் பிரபஞ்சத்தில் மனிதரின் வாழ்க்கை மிக முக்கியமானது. அவ்வாறேதான் நாங்கள் நினைக்கிறோம்.

அடுத்த உயிர்களைப்பற்றி நமக்கென்ன கவலை.எல்லாமே மனிதர்களுக்காகப் படைக்கப்பட்டவை. அப்படித்தான் எங்களின் நினைவுகள். சில சமயங்களும் சொல்லுகின்றன. ஒரு பெண் அழகாக இருக்கிறாள் என்றால் எல்லோர் கண்களும் அவள் மீதுதான். அதில் தப்பேதும்.இல்லை 'அழகை யாரும் ரசித்திடலாம் பொதுவுடமை'அதையே காரணமாக வைத்து சிதைத்து அழிப்பது அழகானதா?

திருமணத்திற்குக் காத்திருக்கும் சில ஆணோ,பெண்ணோ அழகற்றவர்களாகக் கருதப்பட்டாலும் காலப்போக்கில் அவர்களுக்கும் திருமணப் பந்தம் ஏற்படுகிறது. ஒருவரால் நிராகரிக்கப் படுகிறவர்கள் மற்றவர்களுக்கு அழகாகத் தெரிகிறார்கள். அப்படியான சிலர் அவர்களது குடும்ப வாழ்க்கையில் இன்பத்தைக் கண்டு சமுதாயத்தில் உதாரண புருசர்களாக வாழ்ந்து மறைகிறார்கள்.

இந்த இடங்களில் உணர்வு, அன்பு, போதுமென்ற மனம் அத்தனையும் அழகானதாக இருக்கிறது. நல்ல நண்பர்கள் இருவர் கருத்து வேறுபாட்டால் விரோதியாகும் பட்சத்தில் அழகற்றவர்கள் போல் மாறிவிடுகிறார்கள். நட்போடு இருக்கும் காலத்தில் அழகானவர்களாகத் தோன்றியவர்கள் நட்பிழந்த போது அழகற்றவர்களாகி விடுகிறாரகள். ஒருவரை ஒருவர் அருவருப்பாகப் பார்க்கிறார்கள்.இங்கே தான் நட்பே அழகான தாகிறது.

இளவயதுக்காதல் வெறும் கவர்ச்சியால் வருகிறது.காதலிக்கிற காலத்தில் ஒருவரை ஒருவர் பிரிய மனமின்றி எப்போதும் கற்பனையிலே வாழ்க்கையை நடாத்துவார்கள். பசியில்லை,தூக்கமில்லை அந்தரத்தில் மிதப்பார்கள். அவர்களது அவையகங்கள் எல்லாமே யாருக்குமே இல்லாத அழகாக இருக்குமாம் இது அவர்களின் நினைப்பு. எப்போதுமே அருகில் இருக்கவேண்டும் போல் தோன்றும்.

'கொஞ்ச நேரம் பிரிந்தபோதும் எங்கேயென்று தேடும்.என்று கவிஞன் அழகாகக் கூறுகிறான். இவர்களில் சிலர் வாழ்நாள் பூராகவும் மகிழ்வோடு வாழ்ந்து விடுகிறார்கள்.பலருக்கு 'மோகம் முப்பது ஆசை அறுவது' என்றாகி விடுகிறது. இதில் முன்னையவர்கள் வாழ்க்கையில் வெற்றிகண்டு வாழ்க்கையை அழகாக்கி விடுகிறார்கள். அடுத்தவர் அசிங்க மாக்கி விடுகிறார்கள்.

அருவருப்பாய் பார்க்கப் படும் பறவை மிருகங்கள் கூட அன்பினால் அழகாகிவிடுகின்றன. குரங்கு,பாம்புகள் எல்லாமே.

எங்கள் ஊரில் பொன்னப்பா,பொன்னாச்சி என்ற வயது முதிர்ந்த தம்பதிகள். அவருக்கு வயது அப்போது நூற்றிப் பத்து பொன்னாச்சிக்கு நூற்றி ஐந்து. இருவரும் தாம் உழைத்தே வாழ்க்கையை இன்பமாக்கி வாழ்ந்தார்கள்.ஊரார் கண்படும் அளவிற்கு அன்பை சுமந்த அழகான தம்பதிகள். எதிர்பாராமல் வந்த விசக்காய்ச்சலால் பொன்னப்பா போய்ச் சேர்ந்திற்றார். பொன்னாச்சி உடைந்தே போனார்.ஒவ்வொரு நாளும் காலையில் ,வாசலில் இருந்து என்ர ராசா!என்ர போக்காளனே என்னைவிட்டு போய்விட்டாயே ஐயா என்று ஒப்பாரி வைத்து குளறுவா.அவவின் அந்த ஒப்பாரியைக் கேட்டு ஊரே அழுதது.ஒன்றைவிட்டுப் பிரியாத அன்றில் பறவை போல் வாழ்ந்த தம்பதிகள் இப்போதும் கண்ணுக்குள் நிற்கிறார்கள்.

பொன்னப்பா போய்ச்சேர்ந்து இரண்டாவது வருசம்.மில்லுக்குப் போய் நெல்லுக் குத்தி அரிசிக் கடகத்தைத் தலையில் தூக்கி வரும்போது கார் மோதிக் காலமானார். இவர்கள் எங்களூரில் வரலாறு படைத்தவர்கள். இவர்கள் கவர்ச்சிக்கான ஒப்பனை இல்லாத அழகர்கள்.

> ''வெள்ளை நிற மல்லிகையோ
> வேறெந்த மாமலரோ
> வள்ளல் அடியிணைக்கு வாய்த்த
> மலரெதுவோ
> வெள்ளை நிறப் பூவுமல்ல
> வேறெந்த மலருமல்ல
> உள்ளக் கமலமடி உத்தமனார்
> வேண்டுவது''
>
> **சுவாமி விபுலானந்தர்.**

அவர் கூறியது போல் மெய்யான அன்பே அழகானது.

இது அவர் கூறிய இறைவனுக்கு மட்டுமல்லாது இரண்டு உள்ளங்கள் இணையும் வாழ்க்கைக்கும் இது பொருந்தும். அழகான வாழ்க்கை வாழ்ந்த பலரின் சிறப்பே இதற்கு உதாரணமாகும்.





நடுப்பக்கம்

சேவியர்
(தமிழ்நாடு)



# தனது நேரத்தை எவருக்காகவும் பகிர்ந்து கொள்ளாத ஒரு சமூகம் உருவாகிறது!

கோதுமை மணியைப் புடைப்பது போல, காலத்தின் சக்கரம் நேரத்தைப் புடைத்து பொருளாதார மணிகளாய் சேமித்துக் கொள்கிறது.

ஒரு காலத்தில் எல்லா விஷயங்களும் மிக மெதுவாக நடந்தன. அதிக நேரம் தேவைப்பட்டது. பயணங்கள் நேரம் பிடித்தன. அன்றாட பணிகளைச் செய்ய அதிக நேரம் பிடித்தது. வியப்பு என்னவெனில், அதிக நேரம் எடுத்த அந்தக் காலத்தில் தான் நேரம் அதிகமாய் மிச்சமிருந்தது !

நமது சிந்தனையின் டிரங்க் பெட்டிகளைத் திறந்தால் நமது



பால்யம் அழகாய் சிறகடித்துப் பறக்கத் துவங்கும். டிஜிடல் கறைபடாத காற்றின் துகள்களில் அவற்றின் வண்ண இறக்கைகள் உற்சாகமாய் ஆடித் திரியும். மென்மையான அந்த மௌனத்தின் அலைவரிசையில் மகிழ்வின் சத்தங்கள் ஒலிக் குறிப்புகளாய் உறங்கிக் கிடக்கும்.

பாட்டி வீட்டுக்கோ, மாமா வீட்டுக்கோ, தூரத்து உறவினரின் எளிய வீட்டுக்கோ தவறாமல் செல்வதற்காகவே கோடை விடுமுறை நாட்கள் நமக்கு இருந்தன. அந்த எளிய வீடுகளின் முற்றங்கள் ஒரு மாத கால சிரிப்புகளால் நிரம்பிக் கிடக்கும். அதில் பாதங்கள் பதியும் போதெல்லாம் அந்த சிரிப்புகள் சிலிர்த்தெழுந்து நமது கால்களைக் கட்டிக் கொள்ளும். அந்த ஆனந்த விளையாட்டுகளின் பதிவுகள் நேரங்களினால் அழகாகிக் கொண்டிருந்தன.

பதின் வயதிலும் நண்பர்களோடு குளம் குட்டைகளில் குதிப்பது முதல், மீன்களோடும் அணில்களோடும் விளையாடித் திரிவது வரை எல்லாமே இயற்கையின் சட்டைப்பைக்குள் தான் நடந்து கொண்டிருந்தது. அதிகபட்ச தவறான விளையாட்டுகளாய், குளக்கரையில் விளையாடும் சீட்டுக்கட்டுகளோ, தோப்புகளுக்குள்ளே ஒளிந்து விளையாடும் தாயக்கட்டைகளோ தான் இருந்தன. பொழுதுகள் தங்களுடைய பொன் முதுகில் உற்சாகத்தை இறக்கைகளாய்க் கட்டி நம் இனிமைகளின் தாழ்வாரங்களில் தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தன.



இளவயதின் காதல் காலங்களிலும் வெட்கத்தின் சன்னல் திறப்பதற்கே காலங்கள் தேவைப்பட்டன. முதல் வார்த்தையின் பிள்ளையார் சுழி போடவே பிரம்ம பிரயர்த்தனம் தேவைப்பட்டது. ஒற்றையடிப் பாதைகளில் பார்வையை எதிர்பார்த்து, காலத்தோடு மல்யுத்தம் செய்து காத்துக் கிடந்த பொழுதுகள் அவை. அப்போதும் நேரமிருந்தது. வெண்ணிலாவின் நடை பயணத்தை ஆலமர இலைகளூடே பார்க்கும் இனிய ரசனைகளும் மிச்சமிருந்தன.

மனைவியுடன் திருவிழா செல்ல நேரமிருந்தது ! தந்தையோடு வயலோரம் நடைபயில நேரமிருந்தது ! பாட்டியின் நல்ல தங்காள் கதைகளைக் கேட்க நேரமிருந்தது. எல்லாம் முடிந்தபின்னும் உபரியாய் நேரம் உறங்கிக் கிடந்தது.

இன்று, காலம் தன் கால்களில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டிக்கிறது. அவை எல்லாவற்றையும் மிக மிக விரைவாய் செய்து முடிக்கின்றன. அரை நாள் பயணம் இப்போது பத்து நிமிடமாய்ச் சுருங்கியிருக்கிறது. அரை நாள் வங்கி வேலை இப்போது அரை நிமிட தொடுதலில் முடிந்து போகிறது. எனினும் நம் கைகளில் நேரமில்லை. கழுவும் நீரில், நழும் மீனாய் அது நழுவிக் கொண்டிருக்கிறது. ■

17 ஆம் பக்கம் பார்க்க...

S.K.SILKS GOLD PARAADISE
Adler Str 33 - 44137 Dortmund | Tel: 0231 9501 647
Mobil: 01705429251
Mr.P.Sritharan.
Proprietor

PANCREAS SUPPORT
கணையக்காவலன்
GMP
MFG License. No .730
HERBAL MEDICINE
இயற்கை இருக்க இன்சுலின் ஊசி இனி எதற்கு?
Insulin Booster ஆலோசனை தொலைபேசியில் இலவசம்
ஔடதம் Aowdatham
ஆரோக்கிய வாழ்வின் ஆரம்பம்




A.B.Thevaraj
Geobiological Expert (Certified)
Natropathy
Councelling & Sales
www.aowdatham.com
+4915214945800
Covid- 19 காலத்தில் உங்கள் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும்.

பக்க விளைவுகள் இல்லாத 48 மூலிகைகளின் கலவை
- நீரிழிவு நோயை சுகப்படுத்த,
- நீரிழிவு நோயால் ஏற்படும் உபாதைகளை தவிர்க்க
- நீரிழிவு நோயை வருமுன் காக்க
- உயர் இரத்த அழுத்தத்தை தவிர்க்க
- புத்துணர்ச்சி பெற
- தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோசமாய் இருக்க
- கொலஸ்டரோலைக் குறைக்க உடல் எடையைக் குறைக்க

நீங்களும் அருந்தி பயன் பெறுங்கள்
தினமும் காலை, மாலை 5 கிராம் சுடுதண்ணீரில் கலந்து குடிக்கவும்
48 மூலிகைகள் கொண்ட சர்க்கரைக்கொல்லி நீரிழிவு சூரணம்



# தனது நேரத்தை எவருக்காகவும் பகிர்ந்து கொள்ளாத ஒரு சமூகம் உருவாகிறது!

நாட்கணக்கான உறவுகளின் சந்திப்புகள் இப்போது நிமிடங்களாய் நிறம் மாறியிருக்கின்றன. மணிக்கணக்கான உரையாட்கள் இப்போது குறுஞ் செய்திகளாய் குறைந்து போயிருக்கின்றன. எனினும் யாரிடமும் இப்போது நேரம் இல்லை. யாருக்காகவும் செலவிட நேரமில்லை.

கையளவு டிஜிடல் திரைக்குள் மூழ்கிக் கிடக்கும் பொழுதுகள் நமது பொழுதுகளை விழுங்கி ஏப்பம் விடுகின்றன. வெறுமனே சுரண்டிக் கிடக்கும் விரல்களால் மனதில் வெறுமை தான் குடிகொள்கிறது. தூரமாய் இருந்தாலும் நெருக்கமாய் இருந்தன அன்றைய உறவுகள். இன்று அருகிலே இருந்தாலும் தூரமாய் தெரிகின்றன உறவுகள்.

நமது நேரங்கள் அனைத்தையும் சுருக்கு மூட்டையில கட்டி , நம் இடையில் சொருகிக் கொள்கிறோம். பாட்டியின் வெற்றிலைப் பெட்டியைப் போல ! அதிலிருந்து எடுக்கப்படுபவை எல்லாம் நமக்கான நேரங்கள் மட்டுமே. பிறருக்கான பொழுதுகள் என்பவை துக்கம் விசாரிக்க வரும் தூரத்துச் சொந்தம் போல இல்லாமலேயே போய்விட்டது.

சுயநலம் நமது கரங்களை தனது தொழில்நுட்பக் கயிறுகளால் கட்டி வைத்திருக்கிறது. ஒருவருக்கு தேவையென்றால் ஊரே ஓடி வந்து உதவிய காலங்களெல்லாம் கதைகளாகிவிட்டன. இப்போது ஊருக்கே தேவையென்றால் கூட ஒருவரும் வருவதில்லை. வீட்டுக்குள் இருந்தால் கூட மனைவியுடன் பேசுவதில்லை. மடியிலே கிடந்தால் கூட மகனைக் கொஞ்சுவதில்லை. எல்லாரும் நேரத்தில் கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறோம்.

நேசம் இருக்குமிடத்தில் நேரம் இருக்கும் ! உயிருக்குயிரான ஒருவருக்கு உடல் நிலை சரியில்லையேல், இல்லாத நேரமெல்லாம் வந்து வாசலில் நிற்கும். ஏன்? அவர் நன்றாக இருக்கும் போது அந்த நேரம் எங்கே போச்சு ? தொலைந்து போனபின் தேடலாம், அழிந்து போன பின் தேட முடியுமா ?

மனிதநேயத்தின் கரைகளில் நமது நேரங்கள் விதைக்கப்பட வேண்டாமா ? எத்தனையோ செவிகள் ஒரு ஆறுதல் வார்த்தைக்காய் காத்திருக்கின்றன. அவர்களோடு அரை மணி நேரம் செலவிடாமல் ஆறு மணி நேர வாட்சப் அரட்டையால் என்ன பயன் விளையப் போகிறது ?

முகம் பார்த்துக் கதை பேச பெற்றோர் அருகிருக்கும் போது, ஃபேஸ் தெரியா முகங்களோடு ஃபேஸ் புக்கில் குழைந்து நெளிவதில் என்ன பயன் விளையப் போகிறது. சிதறிய பணத்தைப் பொறுக்கலாம். இழந்த பணத்தை மீட்கலாம். முடிந்த நேரத்தை எடுக்க முடியுமா ?

கோவிட் தனது கோர முகத்தை ஆயிரம் பற்களோடு காட்டுகிறதே, அதன் பற்களில் சிக்கிக் கொண்டவர்களுக்காய் பரிதாபப்பட, அவர்கள் நலனுக்காய் செலவிட நம்மிடம் நேரமிருக்கிறதா ?

டிஜிடல் என்பது வசதி அல்ல, வறட்சி. அது நேரத்தை உறிஞ்சி வெறுமையை ஊற்றுகிறது. அதை கொஞ்சம் பரணில் போடுங்கள். விரல்கள் தொடுதிரையைத் தீண்டுவதற்கானது மட்டுமல்ல, மகளின் கூந்தல் கோதியும் மகிழலாம். மகனின் விரல்கள் கோர்த்தும் விளையாடலாம். ஏழையின் தோளைத் தொட்டும் சிறக்கலாம். பெற்றோரின் பாதம் வருடியும் வளரலாம்.

நேரம் நம்மிடம் இருக்கிறது, நாம் தான் நேரத்தை நேரம் காலம் அறியாமல் செலவிடுகிறோம். தொலைக் காட்சியின் முகத்தில் மூன்று மணி நேரம் விழித்திருக்கும் நம்மால், நம் வாழ்க்கைத் துணையோடு மூன்று மணி நேரம். தொடர்ந்து பேசி மகிழ முடியாதா ?

உலகத் திரைப்படத்தின் யதார்த்த இயக்கத்தைப் புகழும் நம்மால், எதிரே இருக்கும் ஏழையின் வீதிகளின் யதார்த்தத்தை ரசிக்க முடியாதா ?

நமக்கு விருப்பமில்லை. நாம் சிறைகளுக்குள் அடைபட விரும்பும் பறவைகளாய் இருக்கிறோம். நமக்கு வானம் அசௌகரியமாக இருக்கிறது. கூண்டுகளே சுகமாய் இருக்கின்றன. நமக்கு விடுதலை வெறுப்பாக இருக்கிறது, அடைபட்டுக் கிடப்பதே ஆனந்தமாய் இருக்கிறது. காரணம் நாம் இப்போது நாமாக இல்லை. நாம் இப்போது தொழில்நுட்பத்தின் தத்துப் பிள்ளை ஆகிவிட்டோம்.

காலம் நமக்கு கோவிட் எனும் எச்சரிக்கை மணியை அடித்திருக்கிறது. மீண்டும் ஒரு பழைய வாழ்வுக்குள் நுழைய வேண்டிய அழைப்பை கொடுத்திருக்கிறது. நமக்கு முக்கியமானவை உறவுகளே எனும் உண்மையை உணர்த்தியிருக்கிறது. பிறருக்காய் செலவிட வேண்டியது பணத்தையல்ல, நேரத்தை எனும் உண்மையை உரக்கச் சொல்லியிருக்கிறது.

**நேரம் இல்லை என்பது**
**மடத்தனமான வாதம். !**
**நேரத்தைச் செலவிடத்**
**தெரியவில்லை என்போம் !**

**நேரம் போதவில்லை என்பது**
**தவறான வாதம் !**
**இருப்பதை சிறப்பாய் செலவிடக்**
**கற்போம் !**

நேரம் நமக்கு மட்டுமாய் தரப்பட்ட ஆறாவது விரல் அல்ல. அது பிறருக்காய் துடிக்கத் தரப்பட்டிருக்கும் நமது ஒற்றை இதயம்.

**நேசம் சேமிப்போம், நேரம்**
**செலவழிப்போம்.**

## குட்டி Story

# இதுதான் இன்றைய நடைமுறை



*பறவை பாவம் பார்த்து ஒடுங்கோ,*
*என்று என்ர இரண்டு*
*பிள்ளைகளும் காரின் பின்பக்கத்தி*
*லிருந்து கத்திச்சினம்.*
*பறவை காருக்கு மேலாலதான்*
*பறந்திச்சு, அது பறந்திடும்*
*என்று தெரிந்துதான் காரை எடுத்*
*தன். ஆனால், பிள்ளைகளுக்கு*
*பறவையை நான் கவனிக்காமல்*
*காரை எடுத்திட்டன் என்று குறை.*
*என்ர அவசரத்தில் ஒரு உயிர்*
*போயிருக்குமாம், மிருகங்களும்*
*மனிசர் மாதிரித்தானாம், கொஞ்சம்*
*கைண்டா இருக்கப் பழக*
*வேணுமாம்... பெரியவள் சொல்லி*
*முடிக்க, சின்னவள் தொடர்ந்தாள்.*
*இருபது நிமிடம் ஒரே கைண்ட்னஸ்*
*பற்றி அறிவுரை. நல்ல காலம்*
*வீடு வந்திட்டுது, அல்லாட்டி இன்*
*னும் தொடர்ந்திருக்கும். காரை*
*நிப்பாட்டிவிட்டு, திரும்பிப் பார்த்*
*தன். பிள்ளைகளின் மடியில்*
*முகுஊ சிக்கன் பக்கற்றுகள், அவர்*
*களது இன்றைய*
*இரவுச் சாப்பாடு - மரக்கறி வேண்*
*டாம் என்று சண்டைபிடித்து*
*வேண்டிய உணவு. என்ர பிள்ளை*
*களையும்,*
*அவர்களின் மடியையும் மாறி மாறி*
*பார்த்தன்!*



தமிழினி
பாலசுந்தரி
(நியூஸ்லாந்து)




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# உணவே மருந்து மருந்தே உணவு

தமிழர்களின் ஆதிப் பண்பாடாக உணவே மருந்து மருந்தே உணவாக இருந்தது. இதற்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

தாம் வாழ்ந்த நிலங்களுக்குரிய உணவுகளை காலநிலைகளுக்கேற்ப பிரித்து அந்தந்த காலத்திற்கேற்ப எந்த உணவு தம் உடலுக்கு ஒத்துப் போகிறதோ அதை எடுத்துக் கொண்டனர்.

இயற்கையோடு இணைந்த வாழ்வியல் ஆரோக்கியமானவர்களாகவும் மகிழ்ச்சியானவர்களாகவும் மக்களை வைத்திருந்தது. விருந்தோம்பல் எனும் அலாதிப் பண்பு அக்காலத்தில் எல்லா மனைகளிலும் இருந்தது. உபசரிப்புகளும் கொண்டாட்டங்களும் நிறைந்த சமூக அமைப்பியல் இருந்தது.



பிரியதர்ஜினி பாலசுப்ரமணியம் (மறவன்குளம்/ வவுனியா, இலங்கை)

பண்டங்களை பண்டமாற்று செய்து தத்தமது தேவைகளை பூர்த்தி செய்து கொண்டனர். நிறைவான பொருளாதாரப் பழக்கவழக்கம் காணப்பட்டது.

நாகரிகம் வளர வளர துரித உணவுப் பண்பாடு இயல்பான வாழ்வியலுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த தொடங்கியது. கட்டுக்கோப்பான உணவுப் பாரம்பரியத்திலிருந்து விலகி வேக உணவுக் கலாச்சாரத்தோடு ஓட ஆரம்பித்து விட்டனர். வேலைப்பளு மற்றும் நகர்ப்புற வாழ்க்கை என்ற மாற்றத்தால் இயந்திரமயமாகிப் போனார்கள் மனிதர்கள்.

வயல்வெளிகள் குளங்கள் மரங்கள் என்று பசுமையான சூழலை மறந்து பெரிய பெரிய கட்டடங்கள்,நெரிசலான வீடுகள்,வாகனப் புகை, என்று நகர்ப்புற வாழ்வியலில் நாட்டமுற்று நம்மை நாமே அழித்துக் கொள்கிறோம். குறிப்பாக உணவு விடயத்தில் நிறைய தவறுகளை செய்கிறோம்.

நச்சுப் பொருட்கள் கலப்பில் உருவாகும் உணவு முறைப் பழக்கத்திற்கு பலியாகிக் கொண்டிருக்கிறோம்.ஒவ்வாத உணவுப் பழக்கத்தால் புதிது புதிதாக பல நோய்களை தேடிக் கொள்கிறோம்.

தலைமுறை தலைமுறையாக பேணிவந்த உணவுப்பழக்கவழக்கம் மருவி புதிது புதிதாக மேற்கைத்தேய பண்புக்கு நம்மை தத்துக்கொடுக்கிறோம். இயற்கையாய் விளைந்த காய்கறிகள் அரிசி பருப்பு என்றிருந்த உணவு முறை மாறி பீட்சா, பர்ஹர், சப்மெறின் என்று உடல் எடையை அதிகரிக்க கூடிய மற்றும் பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய உணவுகளையே பெரிதும் உட்கொள்கிறார்கள்.

கிணற்று நீரை அள்ளிக்குடித்த காலத்தில் வராத நோய்களெல்லாம் இப்பொழுது வருகிறது. போத்தலில் அடைக்கப்பட்டு அதற்கு பணம் கொடுத்து தூய நீர் என்று குடிக்கிறோம். இயற்கைக்கு விலை பேசி கூறு போடுகிறோம்.

அதனாலேயே சில சமயங்களில் இயற்கைக்கு நாம் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. உலகமயமாதலில் நாம் காணாமல் போய்க் கொண்டிருக்கிறோம்.நம் பாரம்பரியங்களை தொலைத்துக் கொண்டிருக் கிறோம்.

நாம் முற்றும் தொலையாமல் அவைகளை நம்மோடு பிணைத்துக் கொள்ள வேண்டும். நம் தலைமுறை தாண்டி அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு பாரம்பரியங்களை கொண்டு சேர்க்க வேண்டும்.

உணவே மருந்து மருந்தே உணவு என்ற பக்குவம் எல்லோர் மனதிலும் பதிய வேண்டும்.மாற்றம் நிகழ்த்தியாக வேண்டும் வாழ்வு சிறக்க மாற்றத்தை எதிர்கொள்வோம்.






யேர்மனி ஹப்பெற்றால்

## ஸ்ரீ நவதுர்க்காதேவி அம்பிகையின் அலங்கார உற்சவக்காட்சிகள் 2021






யேர்மனி, ஹப்பெற்றால் நகரில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ நவதுர்க்காதேவி அம்பிகையின் அலங்கார உற்சவம் 15.05.2021 சனிக்கிழமை அன்னை அருளால் இனிதே நிறைவடைந்தது. அன்னையின் திருவுருவத்தையும், அருள் மழையில் நனைந்த அடியார்கள் திருக்கூட்டத்தில் ஓர்சிலரையும் இங்கே காணலாம்.





# புகைபிடிப்பதை நிறுத்தினால் என்ன நடக்கும்?

புகைபிடிப்பதால் மனித உடலுக்குக் கேடு, குறிப்பாக நுரையீரல் புற்றுநோய், இரத்தப் புற்றுநோய், இருதய நோய், அதிகமான கொலஸ்டிரால், பக்கவாதம், கண், தோல், பற்களில் பிரச்சனைகள் என்று எண்ணற்ற நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகமாக உள்ளது. சுருக்கமாகச் சொல்லப்போனால், புகை பிடிக்கும் பழக்கம் ஒரு சராசரி மனிதனின் ஆயுளைக் குறைக்கின்றது. ஆனால் இதில் உள்ள ஆச்சரியம் என்ன தெரியுமா? பல வருஷங்கள் புகை பிடிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தாலும் பரவாயில்லை, நீங்கள் இன்று கூட புகை பிடிப்பதை நிறுத்தி விட்டால், உங்களால் நீண்ட காலம் உயிருடன் வாழ முடியும். அது ஏன் என்று அறிய விரும்பினால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

புகை பிடிப்பதால் ஆபத்து என்பது எல்லோருக்குமே நன்றாகத் தெரிந்த ஒரு உண்மை மட்டும் அல்லாமல், இது மேலும் பல ஆய்வுகளால் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், புகைபிடிப்பவர்கள் இப்பழக்கத்தை நிறுத்த யோசித்தால், அதைக் கண்டிப்பாகச் செய்யுங்கள், ஏனென்றால் இந்தப் பழக்கத்தை தாமதமாகக் கைவிட்டாலும் கூட, அவர்கள் தங்களின் ஆயுளை நீடிக்க இயலும் என்பது ஆராய்ச்சியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா, சீனா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்சு, ஸ்பெயின் மற்றும் அமெரிக்கா ஆகிய 7 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், புகைபிடிப்பவர்கள், 3 முதல் 50 ஆண்டுகள் வரைக் கண்காணிக்கப்பட்டு வந்தனர். இதில் அறுபது வயதைத் தாண்டி புகைப்பழக்கத்தைக் கைவிட்டவர்களின் ஆயுள் காலம் 49 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.



நீங்கள் புகைப் பழக்கத்தை விட்ட உடனே உங்கள் உடலில் என்ன நடைபெறும் தெரியுமா? வெறும் 20 நிமிடங்களில் மட்டுமே உங்கள் இருதயத் துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் நோர்மலுக்கு வந்து விட ஆரம்பித்து விடும். எட்டில் இருந்து 12 மணி நேரங்களுக்குள், புகை பிடிப்பதால் உங்கள் இரத்தத்தில் கலந்த கார்பன் ஓராக்சைடு (carbon monoxide) கொஞ்சம் கொஞ்சமாக நீங்கத் தொடங்கும். புகை பிடிப்பதால் பொதுவாக மாரடைப்பு அதாவது heart attack வருவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும். வெறும் 24 மணி நேரம் புகை பிடிப்பதை விட்டாலே போதும், மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு குறைய த் தொடங்கிவிடும். இது மட்டும் இல்லை, இன்னும் இருக்கிறது கேளுங்கள்!

மூன்றே மூன்று நாட்களுக்குப் பின்பே உங்கள் உடம்பில் உள்ள அனைத்து நிகோடினும் (nicotine) வெளியேற்றப்பட்டு விடும். இதைத் தொடர்ந்து உங்களுக்குச் சுவாசிப்பது கூட இலகுவாக இருக்கும். ஒரு சில வாரங்களில் இருந்து மாதங்களுக்குள் உங்கள் நுரையீரல் வழக்கம் போல் செயற்பட ஆரம்பித்து விடும். புகை பிடிப்பதை விட்டு வெறும் 1 வருடத்திற்குப பின்பு, புகை பிடிப்பதால் ஏற்பட இருக்கும் இருதய நோய் வருவதற்கான வாய்ப்பு 50 சதவீதத்திற்குக் குறைந்துவிடும் என்றால் நம்ப முடிகின்றதா? இப்படியே ஆண்டுகள் போகப் போக மாரடைப்பு, பக்கவாதம், புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதற்கான வாய்ப்பு குறைந்து கொண்டே போகும்.

**எனவே புகைபிடிப்பவர்களில் பலர் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு என்று கேட்பது போல், இவ்வளவு காலம் புகைத்த நாம் இனி இதனைக் கைவிட்டால் ஒரு பலனும் கிடையாது என்கிற கருத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் உண்மையில் இந்தக் கருத்து தான் தவறானது என்பது இன்று உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகின்றேன். எனவே நண்பர்களே, புகைபிடிப்பதைக் கை விடுவதற்கு நேர காலம் ஒன்றுமே இல்லை! நீங்கள் புகைக்கும் பழக்கத்தை இன்று கூட கைவிட்டாலும், நீண்ட ஆயுளைப் பெறலாம் என்பது நிச்சயம்!**

இனி நீங்கள் கூறுங்கள்! புகை பிடிப்பதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இதற்குப் பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!







நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.



திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்




ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

கனகசபேசன் அகிலன்
(இங்கிலாந்து)




# அதிசயமும் அவலமும்

சில வருடங்களுக்கு முன் கனடாவிற்கு சென்றிருந்தேன், அங்கிருந்து போது பிள்ளைகளுக்கு பொழுது போக்கிற்காக Wonderland எனப்படும் இராட்டினங்கள் [Rides] நிறைந்த ஒரு விளையாட்டிடத்திற்கு சென்றிருந்தோம். என்றும் போலவே அன்றும் அங்கு சனக்கூட்டம். பிள்ளைகளை விளையாட விட்டுவிட்டு நான் ஒரு ஓரமாக நின்று அவர்களை பார்த்துக்கொண்டு நின்றேன். இப்படி நின்றுவிட்டு சிறிதே இடது பக்கமாக திரும்பிய பொழுது ஒரு வயது நிரம்பிய ஐயா ஒருவர் என் முன்னே நின்று கொண்டிருந்தார். எனக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை, அவரே ஆரம்பித்தார். அவர் கேட்ட முதல் கேள்வி 'தம்பி நீர் இலங்கையிலை எவடம்?' என்பதாகும். அதற்கு பதிலாக 'ஐயா, என்ரை நெற்றியிலை தமிழன் என்று ஒட்டியே வைச்சிருக்கிறன்?' என்று நான் அவரை கேட்டேன். அதற்கு அவர் 'நான் உம்மை சில நிமிடங்களாய் அவதானிச்சுகொண்டிருந்தனான், நீர் உம்மோடே வந்தவையோடை தமிழிலை பேசுறதை கேட்டனான், அது தான் எங்கடை ஆட்கள் தான் என்று மனம் விட்டு கொஞ்சம் கதைப்பமென்று வந்தனான்...' என்று கூறி முடித்தார்.

நான் எனது ஊரையும் இடத்தையும் அவரிடம் சொல்ல...'ஆ, நீர் அப்ப முருகேசு வாத்தியாற்றை பேரனே? எனக்கு அவரை நல்லாய் தெரியும், அவற்றை வீட்டை பல தடவை வந்திருக்கிறன், நீர் எந்த மகன்றை மகன்? என என்னைப்பற்றி எல்லாவற்றையும் அறிந்தபின். 'தம்பி, என்றையிடம் விசுவமடு, நான் கனகாலம் உரும்பிராயிலையிருந்து படிப்பிச்சனான், ஆசிரியர்மாருக்கும் நான் பரிசோதகராய் இருந்தனான், எனக்கு இப்ப 74 வயது, இப்ப சில வருடங்களாய் பிள்ளையள் என்னை கூப்பிட்டு கனடாவிலை விட்டிருக்கினம், ஆனால் நான் அவையோடையில்லை, நான் தனிய இருந்து உழைச்சு சாப்பிடுகிறன் என்று கூறி ஒருபக்கம் கையை நீட்டி , அங்க பாரும், அதிலேயிருக்கிற பள்ளிக்கூடத்திலைதான் வேலை செய்யிறன். நான் போய் வேலை கேட்க்கேகை அவையள் 'இந்த வயசிலை வேலை செய்யப்போறியளே, ஓய்வெடுக்கலாமே?' என்று கேட்டவை. நான் சொன்னன் 'நான் தமிழன், எங்களுக்கு உள்ளங்கையை காட்டி வாங்கி பழக்கம் இல்லை, புறங்கையை காட்டி வேலைசெய்து தான் பழக்கம்' என்று. அதை கேட்டிட்டு பகுதி நேரமாய் ஒரு வேலை போட்டு தந்தவையள்.

எல்லாவற்றையும் அமைதியாக கேட்டுவிட்டு, அது சரியையா ஏன் இலங்கேலை இருக்காமல் வந்து இஞ்சை இந்த குளிருக்கை கஷ்டப்படுறியள் என்று கேட்டேன், அதற்கு அவர் 'தம்பி, எனக்கும் அங்கை தான் இருக்க விருப்பம், நானும் என்ற மனுசியும் முள்ளிவாய்க்கால் பிரச்சனைக்கையில்லே அம்பிட்டனாங்கள், உயிர் பிழைச்சு வந்ததே பெரும்பாடு. ஒரு சின்ன இடதுக்குள்ளை நாங்கள் எல்லோரும் பட்ட கஷ்டம் சொல்லிலடங்காது, என்பவரை நான் இடைமறித்து 'ஐயா, நானும் இஞ்சை வரேக்கை அங்கை பிரச்னைதான், எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் வந்தனான்' என்று கூற. என்னை சிலவினாடிகள் அப்படியே உற்றுப் பார்த்துவிட்டு' உமக்கு நான் சொல்லுறது வடிவாக விளங்கேல்லை என்று நினைக்கிறன், நீர் பிரேதங்களுக்கு பக்கத்திலை படுத்திருக்கீறீரே? கை,கால்கள் இல்லாமை இரத்தம் ஒழுக ஒழுக சனங்கள் ஒப்பாரி வைச்சதை நேரிலை பார்த்திருக்கிறீரே? நான் எல்லாத்தையும் பக்கத்திலையிருந்து அனுபவிச்சனான், இன்னும் அதிலையிருந்து என்னாலை முழுதாய் மீளமுடியேல்லை...' என்று கூறியவரின் கண்களில் கண்ணீர் சிறிதாக நிரம்ப ஆரம்பித்தது, எனக்கும் அடுத்து என்ன பேசுவதென்று தெரியாமல் வாயடைத்துவிட்டது.

நான் பேச்சை மாற்றுவதற்காக 'ஐயா, கொஞ்சம் பொறுங்கோ, பிள்ளையள் எங்கையென்று தெரியேல்லை' என்று அங்கும் இங்குமாக பார்த்தேன். பின்பு அவரிடம் 'யாரோடை வந்தனீங்கள், பேரப்பிள்ளையளை கூட்டிக் கொண்டு வந்தனீங்களே?' என்று வினவினேன்.

அதற்கு அவர் 'தம்பி , நான் தனியாக சைக்கிள்ளை வந்தனான், இஞ்சை நான் இப்ப மூன்று வருடமாய் வாறன், வருட அனுமதி [yearly pass ] எடுத்து வச்சிருக்கிறன். உந்த எல்லா ரைடுகளிலயும் பல தரம் ஏறிட்டேன். நான் இஞ்சை வாறது எனக்கிருந்த மனபயத்தை போக்க, முதல்ல உதுகளிலை ஏறேக்கை கொஞ்சம் பயந்தான், பேந்து மற்ற ஆட்களை பார்த்து எனக்கும் துணிவு வந்திட்டுது' என்றார். அதற்கு நான் 'ஐயா, முள்ளிவாய்க்காலில் நீக்காத பயத்தையா இங்கே நீக்கப் போகிறீர்கள்?' என்று நான் சொல்லிமுடிக்கமுன் என்னை நோக்கி ஓடிவந்த பிள்ளைகள் 'அப்பா, இந்த தாத்தாவோடை கதைக்கிறதை விட்டுட்டு கெதியாய் வாங்கோ, இருளப் போகுது, இன்னும் கனக்க பயங்கரமான ரைடுகளிலை எற வேணும்' என்று என் கைகளை இழுத்தார்கள். நான் அவர்களை ஒருபுறம் அழைத்து, இரகசியமாக 'ஆட்களோடை கதைக்கேக்கை இப்படி குறுக்கிடக்கூடாது, இந்த தாத்தா இது எல்லாத்தையும் விட பயங்கரமான ரைடிலை போட்டு வந்திருக்கிறார், அவற்றை கதையை நான் கட்டாயம் கேட்க வேண்டும், நீங்கள் போய் வரிசையிலை நில்லுங்கோ நான் மெல்லமாய் தாத்தாவோடை நடந்து வாறன்' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு அந்த ஐயாவின் மிகுதி அனுபவத்தையும் அவரிடம் கேட்டறிந்துகொண்டேன்.

எங்களை சுற்றியிருந்த உலகம் இன்பத்தில் ஆனால் நாங்கள் இருவரும்...

அன்று, என்னால் அவர் சொன்னதை கேட்கத்தான் முடிந்தது, அவருக்கும் அதுதான் தேவைப்பட்டது தான் அடக்கி வைத்திருந்த துக்கத்தையும், ஆதங்கத்தையும் புரிதலுடன் செவிமடுக்க ஒருவன்! இதைத்தான் பலர் எதிர் பார்க்கிறார்கள்; உங்கள் நேரத்தையும் புரிந்துணர்வையும்...வேறெதையும் அல்ல! எனவே இப்படி மனிதர்களை காணும் போது, அவர்களுக்காக உங்கள் நேரத்தை சிறிது ஒதுக்கி அவர்கள் துயரத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்.

இப்படி எத்தனை பேர், பாதியை அனுபவித்த என் போன்றவர்கள், மீதியையும் அனுபவித்து தவித்துக் கொண்டிருக்கும் அந்த ஐயா போன்றவர்கள், எதையும் அறியாத என் பிள்ளைகள் போன்ற வளர்ந்து வரும் இளம் சமுதாயம்.... இப்படியாக, தமிழன் தன்னுள்ளே தாங்கித்திரியும் தவிப்புகள் தான் எத்தனை? உள்ளத்திலும், உடலிலும் ஆறாத வடுக்களை சுமந்தபடி, தான் வாழும் உலகத்திற்காய், சமூகத்திற்காய் எல்லா அவலங்களையும் தம்முள் புதைத்து வைத்துவிட்டு, உதடுகளில் நிறைந்த புன்னகையுடன்.... தமிழா, நீ ஒரு புரியாத புதிர்!










விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# Endangered to Enchanted Environment

**Jaffna**/ Yalppaam(Tamil) is the capital city of the Northern Province of Sri Lanka. Jaffna's suburb Nallur, being as the capital of the four-century-long medieval Jaffna Kingdom. Before Sri Lankan Civil War took place, it was Sri Lanka's second most famous city next to Colombo. The city is surrounded by the Jaffna Lagoon, on its west and south the place called Kokkuvil is situated and Thirunelveli to the north, and Nallur to the east. The soil of Jaffna peninsula is consists of limestone as it was submerged under sea during the Miocene period. The entire land mass is flat and lies at sea level. Within one mile (1.6 kilometres) of the city center is the island called Mandaitivu which is connected by a causeway. Palmyra groves can be seen where in baren lands.

The 1980s the war started and made extensive damage, many palmyra trees were pierced with shell pieces and damaged. The palmyra and coconut trees were cut down for several purposes such as making bunds. Since the end of civil war in 2009, refugees and internally displaced people began returning to homes, while government and private sector reconstruction started taking place. Historically, Jaffna has been a contested city.

### Geography and climate

Jaffna has tropical grassland climate with a dry season between February and August, and a wet season between September and January. Jaffna's temperature goes to peak in the months of April – May and August – September and then the temperature get coolest in December – January. Jaffna Peninsula is low (max 11 m) and flat, with coastal landforms, and soils a mixture of marine. The peninsula has no permanent rivers because of the flat terrain and limited rainfall, and there are no land forms suitable for reservoir development. These days even though there are plenty of tree planting activities, drainage cleaning, awareness programs happening, people still have to give more individual focus in their routine to reduce use of plastic. Individual act is the most powerful one to save not only their district but also the country and the world.



Bavvatharani R
Nallur

### Climate change

We heard and watched in TV and read articles about the climate change which is taking place for several years in global wide. We can see the massive changes in rainfall season. The most obvious signs of climate changes that are taking place globally are higher temperatures, droughts, wilder weather, change in rainy and winter seasons, melting glaciers, shrinking sea ice, and thawing permafrost.

The 2020 Climate Risk Index was presented in Madrid during the last United Nations Conference on Climate Change (COP25 Chile) and determines the 10 countries presently most affected by climate change — based on facts from 2018. Those countries are: JAPAN (Climate Risk Index: 5.5) , PHILIPPINES (Climate Risk Index: 11.17), GERMANY (Climate Risk Index: 13.83), MADAGASCAR (Climate Risk Index: 15.83) , INDIA (Climate Risk Index: 18.17), SRI LANKA (Climate Risk Index: 19), and KENYA (Climate Risk Index: 19.67) .

Sustainable development should be taken to reduce these environmental issues by having and promoting green services and green products with eco labels. Make green cities and buildings with proper eco-friendly technology. Waste management and energy efficiency should be highly observed, and operations and maintenance of green transport should be implemented properly. By introducing fuel-efficient vehicles and improve road network can strengthen eco-friendly public transport system. It will help to lower carbon emissions and create less pollution. Green industries, green agriculture, water efficiency, organic farming technique will lead gradual transformation of existing plantations and other farmlands into eco-friendly farms and lands. Also, the general public should be made aware of the negative impacts of uncontrolled disposal of e-waste and more vigilant with green system as it is our duty to preserve mother earth. Begin with your district and mother earth's hands will join with us for healthy environment automatically!!




வெற்றிமணி திருமண சேவை

நீங்களே பேசிக்கொள்ளுங்கள்



மணமகள் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து கல்விற்று
(Machinenbau) என்ஜினியராக கடைமையாற்றும்
30 வயது உடைய ஆண்மகனுக்கு யேர்மனியில்
Nordrhein-Westfalen இல் மணமகள் தேவை.
பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு இலக்கம்: 0175 850 1489

மணமகள், மணமகன் தேவைகளை பிரசுரிக்கலாம்.
3 தடவை பிரசுரிக்க குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

ஜேர்மன் வாழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்

விரைவில் வெளிவரவுள்ள

'படைப்பாளர்கள்'

என்னும் நூலில் உங்கள் நூல் விபரம் மற்றும் ஆக்கதாரர்களின் விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளோம்.

உங்கள் நூலாக்க விபரங்களைப் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு (ebook) ஆகவும் நூல் உருவில் வெளியிடப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
(germantamilwriter@outlook.com)

சு.பாக்கியநாதன்
0152 10378556
பி.எஸ்.இராஜகருணா
0176 31740702

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இலக்கியத்தில் இவர்கள்... 11

கௌசி (யேர்மனி)

உடல் உறுப்புக்கள் மாற்று சத்திரசிகிச்சை என்பது இன்றைய கால கட்டத்தில் மிக இலகுவாகப் போய்விட்டது. மூக்கு மாற்று சத்திர சிகிச்சை என்றவுடன் எமக்கு ஞாபகம் வருவது நடிகை ஸ்ரீதேவி அவர்கள். தோல் சத்திர சிகிச்சை என்றவுடன் எமக்கு ஞாபகத்தில் தட்டுவது மைக்கேல் ஜக்ஸன். இவற்றை அறிந்து உலகத்தில் பணமிருந்தால் என்னதான் செய்ய முடியாது என்று சலிப்படைந்தவர்கள் அதிகம். இவ்வாறு அருமையாக பணம் அதிகமாக வைத்திருந்தவர்கள் மட்டுமே பெற்றுக் கொண்ட இந்த வசதி வாய்ப்புக்கள், இன்று இலகுவாக மாறிவிட்டன. என் கண்ணைப் பார்த்து, என் மூக்கைப் பார்த்து, என் உதடடைப் பார்த்து, நையாண்டி பண்ணுகின்றார்கள், என் மனதுக்கு வேதனையாக இருக்கின்றது என்று மருத்துவ காப்புறுதியிடம் முறையிட்டால் அல்லது எம்மிடம் வேண்டிய பணம் இருந்தால் போதும் நாங்கள் விரும்புகின்ற வடிவத்தில் எம்மை மாற்றிக் கொள்ள மருத்துவ உலகம் இடமளிக்கின்றது.

எப்படி இருந்தவள் இப்படி ஆகிவிட்டாள் என்பது போல் சத்திரசிகிச்சை ஏமாற்றிய சம்பவங்களும் நடக்கின்றன. ஆனால், இவ்வாறான வசதி வாய்ப்புக்கள் நவீன உலகத்திலேதான் வாய்ப்புடையதாக இருக்கின்றது என்று நாம் பெருமை கொள்ள முடியாது. புராணங்களிலும் இலக்கியங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

காளத்தி மலையிலே அமைந்திருந்த சிவலிங்கத்தை நாள் தோறும் வழிபடும் திண்ணன் என்னும் வேடன், செய்த



சத்திரசிகிச்சையே கண்மாற்று சத்திரசிகிச்சையாக இன்று நாம் அறிகின்றோம். வழமையாக இலிங்கத்திற்கு பன்றி இறைச்சியைப் படைத்தும், மலர்களால் அர்ச்சனை செய்தும் திண்ணன் சிவலிங்கத்தை வழிபடுவது வழக்கம். ஒருநாள் சிவலிங்கத்தின் வலது கண்களில் குருதி வடிவதைக் கண்டு ஓடிச் சென்று பச்சிலை வைத்தியம் பார்த்தான். இரத்தம் வடிவது நிற்கவில்லை. உடனே தன்னுடைய ஒரு கண்ணைத் தோண்டி வலது கண்ணிலே வைத்தான். உடனே இடது கண்ணில் இருந்து குருதி வடிவதைக் கண்டு இடது கண்ணையும் வைப்பதற்காக முயற்சித்த போது நில்லு கண்ணப்பா என்று கூறி இறைவன் தடுத்ததாக ஒரு பெரியபுராணக்கதை படித்திருக்கின்றோம்.

The Falcon and the Winter Solder என்னும் நாடகத்திலும் Marvel படங்களிலும் Winter Solder ஆக நடித்த sergeant James Buchanan என்பவர் சக்தி வாய்ந்த கையைப் பொருத்தியிருந்ததை நாம் பார்த்திருக்கின்றோம். அதாவது கைச்சத்திரசிகிச்சை. இதனைப் பழமொழி நானூறு என்னும் இலக்கியத்திலே ஒரு பாடல் எடுத்துக் காட்டுகின்றது. பொற்கைப் பாண்டியன் என்று அழைக்கப்படும் பாண்டிய மன்னன் வரலாறு செயற்கைக் கை பொருத்தும் சத்திரசிகிச்சை அக்காலத்தில் இடம் பெற்றிருந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரமாக அமைகின்றது.

## எமக்கு எதுவும் புதியது அல்ல

நாடுவளங் கொண்டு
புகழ்நடுதல் வேண்டித்தன்
ஆடுமழைத் தடக்கை
அறுத்துமுறை செய்த
பொற்கை நறுந்தார்ப்
புனைதேர் பாண்டியன்
கொற்கைஅம் பெருந்துறை
குனிதிரை தொகுத்த
விளங்குமுத்து உறைக்கும்
வெண்பல்
பன்மாண் சாயல் பரதவர்
மகட்கே.

கீரந்தை என்னும் வேதியன் வணிகத்தின் பொருட்டு வேறு தேசம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது திருடர் பயத்திற்காக அவன் மனைவி அஞ்சினாள். வேதியனும் நீ பயப்படத் தேவையில்லை. நல் ஆட்சி புரியும் மன்னன் உள்ள இந்த நாட்டில் உனக்கு ஏது பங்கமும் ஏற்படாது என்று சொல்லியதை நகர் வலம் வந்த மன்னன் கேட்டான். அன்றிலிருந்து நாள் தோறும் நகர் வலம் வந்து மன்னன் வேதியன் வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் கீரந்தை வீட்டில் கதைக்கும் சத்தம் கேட்டது. கதவைத் தட்டிய மன்னன் கீரந்தை என்று அறிந்து கீரந்தை சந்தேகப்படுவான் என்று கருதி எல்லோருடைய வீட்டுக் கதவையும் தட்டினான்.

இதனால், அடுத்தநாள் நகரத்து மக்கள் எல்லோரும் இரவு தங்களுடைய வீட்டுக் கதவுகள் எல்லாம் திருடனால் தட்டப்பட்டன என்று அரச சபையிலே முறையிட்டனர். சபையிலே அமர்ந்திருந்த புலவர்களும், அமைச்சர்களும் திருடனின் கையை வெட்ட வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். உடனே வாளைக் கொண்டு வரச் சொல்லி மன்னன் தன்னுடைய கையை வெட்டித் தானே எல்லோருடைய கதவையும் தட்டியதாகச் சொன்னான். அதன் பின் இப்பாண்டிய மன்னன் பொன்னால் ஒரு கை செய்து வரச் சொல்லி அக் கையைப் பொருத்தி அதனோடே வாழ்ந்தான். அதனால் பொற்கை பாண்டியன் என்று பெயர் பெற்றான்.

இவ்வாறு எமக்கு எதுவும் புதியது அல்ல. பழைமை புதுமையாகக் காண்கின்றோம் என்பதே உண்மை.

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com
finma : 34598 cicero : 25605



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

SHAKTHY FOUNDATION

## சக்தி நிறுவனம், திருகோணமலை

# யேர்மனியில் இருந்து கல்விக்கான ஓர் அறப்பணி



சக்தி அறக்கட்டளை திரு.திருமதி நிஷாந்தி நவநீதன் குடும்பத்தினரால் [28.03.2018] ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் தமது தனிப்பட்ட வருமானத்தில் இவ் அறக்கட்டலையை 3 வருடங்களாக வெற்றிகரமாக நடத்தி வருகின்றார்கள். இவர்களின் பணியால் பலனடைந்த மாணவனின் ஓர் கடிதம்.

**சக்தி நிறுவனம், திருகோணமலை**
**அன்புடையீர்**
**நன்றி தெரிவித்தலும் வேண்டுகோளும்!**

மேற்படி கிராமத்தில் வசித்து வரும் தனோஜன் ஆகிய நான் எழுதுவது. எனது கிராமமானது ஒரு பின்தங்கிய கிராமம் ஆகும். போக்குவரத்துப் பிரச்சினை, மின்சார வசதி பூரணமாக இல்லை, நீர்வசதி குறைவு, நிறைவான கல்வியினை பெறுவதற்கான போதியளவு ஆசிரியர்கள் இன்மை.


நான் எனது க.பொ.த. சாதாரணப் பரீட்சை வரையிலான கல்வியினை எனது கிராமத்தில் படித்துள்ளேன். எனது உயர்தரக் கல்வியினை சேனையூர் மத்திய கல்லூரியில் மேற்கொண்டேன். எனது கிராமத்திலிருந்து சேனையூர் மத்திய கல்லூரிக்கு வருவதற்கான தூரம் 10 கிலோ மீற்றர் ஆகும். வரும் பாதை முற்றாக கட்டினால் சூழப்பட்டது. இதில் பயணம் செய்வது ஆபத்தானது. எனது அப்பா கூலி வேலை செய்து எங்களை பராமரித்து வந்தார். தற்போது அவருக்கு சுகவீனம் காரணமாக எனது குடும்பம் மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தான் 2018 ஆம் ஆண்டு சேனையூர் மத்திய கல்லூரியில் தங்கள் சக்தி நிறுவனம் எனது கிராமத்திலிருந்து என்னையும் இன்னும் இரண்டு மாணவர்களையும் ஏனைய மாணவர்களையும் சேர்த்து சேனையூர் மாணவர் விடுதி ஒன்றினை நிறுவியது. அங்கு சக்தி நிறுவனத்தினால் சகல கல்வி வசதிகளும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இதனை உரிய முறையில் பயன்படுத்தி பல்கலைக்கழக அனுமதியினை பெறும் அளவிற்கு என்னை வளர்த்துள்ளார்கள். விடுதியில் இருந்து கற்கும் சந்தர்ப்பம் கிடைக்காவிடின் எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருக்காது. அத்தோடு எனது கிராமத்திலிருந்து பல்கலைக்கழகம் தெரிவான முதல் மாணவர் என்ற பெருமை சக்தி அமைப்பையே சேரும். இந்நிறுவனத்திற்கு நிதிகளை வழங்கி கொண்டிருக்கும் பிரங்போட் – யேர்மனியில் வசிக்கும் திருமதி நிசாந்தி நவநீதன் அவர்களுக்கு, என் குடும்பம் சார்பாக, மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றன். அத்தோடு எனக்கும், என்னைப் போன்ற மாணவர்களுக்கும், பல்கலைக்கழகப் படிப்பினை மேற்கொள்ள வசதிகளைச் செய்து தருமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சக்தி நிறுவனத்தின் முலம் உதவிபுரியுமாறு, வெளிநாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் தமிழர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். தங்கள் சேவை என்றும் தொடர இறைவனை பிரார்த்திக்கின்றேன்.



**நன்றி**
**சௌ.தனோஜன்**
**வீரமாநகர்,தோப்பூர்,**
**திருகோணமலை - 2021.04.08**

---




## குருதிச்சோகை எதனால் ஏற்படுகிறது? அது குணமாக்கக் கூடிய நோயா?

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு உபயோகிக்கின்றனர். வேறு சிலர் மிகக் கடுமையான அளவுகளில் உபயோகின்றனர். இதுவும் அவ்வாறே வெளித்தெரியாத குருதிப் பொசிவை இரைப்பையில் ஏற்படுத்துகின்றன.

இரைப்பை பெருங்குடல் போன்ற உணவுக் கால்வாயில் ஏற்படும் சில புற்றுநோய்களை ஆரம்ப நிலையயில் கண்டறிவது கஸ்டம். ஆனால் அவையும் குருதி இழப்பையும் அதன் காரணமாக இரத்தசோகையையும் கொண்டுவரும். பெண்களைப் பொறுத்தவரையில் இரண்டு இயற்கையான நிகழ்வுகளின் போது சில தருணங்களில் அதிக குருதிப் பெருக்கு ஏற்பட்டு இரத்த சோகை வரலாம். மாதவிடாய் மகப் பேறு ஆகியவற்றையே குறிப்பிடுகிறேன். அதே போல வீதி விபத்துகளின் போதும் சில சத்திரசிகிச்சைகளின் போதும் குருதி இழப்பு எதிர்பாரத விதமாக அதிகமாக இருக்கலாம்.

### செங்கலச் சிதைவு

குருதி வெளிப்படையாக வெளியேறாத போதும் செங்குருதிக் கலங்கள் கருதிச் சுற்றோட்டத் தொகுதியில் சிதைவடைவதாலும் குருதிச் சோகை ஏற்பட வாய்ப்பு உண்டு. செங்குதிக் கலங்களின் வாழ்நாள் நுமார் 110 முதல் 120 நாட்கள் வரையே ஆகும். நாளாந்தம் முதிய செங்குருதிக் கலங்கள் சிதைவடைய புதிய கலங்களை எமது உடல் உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது.

சில தெற்றுநோய்கள், மருந்துகள், சிறுநீரக நோய்கள் மற்றும் நச்சுப் பொருட்கள் செங்குருதிக் கலங்களை காலத்திற்கு முன்னரே சிதவடையச் செய்துவிடலாம்.

Sickle cell anaemia என்று ஒரு நோய் இருக்கிறது. இந்த நோயுள்ளவர்களின் செங்குருதிக் கலங்கள் தமது வழமையான வடிவில் இருக்காது. பிறைவடிவிலேயே இருக்கும்.அதன் காரணமாக அவை வழமையை விட சீக்கிரமாகச் சிதைவடைந்து வடும். ஆதனால் குருதிச் சோகை ஏற்படும்.

### இன்னும் சில காரணங்கள்

உணவில் போதிய அளவு இரும்புச் சத்து மற்று விற்றமின் B12 போன்றவற்றை எடுக்காமல் இருப்பதாலும் இரத்த சோகை ஏற்படுகிறது. பலு மூதாட்களின் இரத்தசோகைக்கு போசக்கற்ற உணவை உட்கொள்வதே காரணம் என்று கண்டறிந்துள்ளார்கள்.

புகைத்தலும் மிகவும் மெலிவான உடலைக் கொண்டவர்களுக்கு இரத்த சோகை ஏற்படுவதை காணக் கூடியதாக இருக்கிறது. HIV, ரூமற்றொயிட் வாதம், நாட்பட்ட சிறநீரக செயலிழப்பு நிலை, மலேரியா, குறொன்ஸ் டிசீஸ் (Crohn’s disease) போன்ற பல்வேறு நோய்களின் போதும் இரத்த சோகை ஏற்படுகிறது. இவ்வளவு சொல்லியதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ளக் கூடியது என்ன? இரத்தசோகை ஏற்படுவதற்கான காரணங்கள் பல. எனவே காரணத்தைக் கண்டறிய வேண்டும். காரணத்திற்கு ஏற்ப சிகிச்சை செய்தால் இரத்த சோகையை குணப்படுத்தலாம் என்பதே ஆகும். வெறுமனே இரும்புச் சத்துக் குளிசைகளை உட்கொள்வதால் இதைக் குணப்படுத்த முடியாது.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இலங்கை இனி யாருடைய நாடாகும்?

இலங்கையில் இதுவரையில் தீர்க்கப்படாத இனப் பிரச்சினையும் வலுவிழந்த அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பும் இலங்கையை மற்றைய நாடுகள் கையாள்வதற்கு வழி வகுத்துவிட்டது.

வலுவிழந்த உடல் மீது நோய்க்கிருமிகள் குடிபுகுவது போல இலங்கை தன்னைச் சுற்றியுள்ள நாடுகளை சமாளிக்க தன்னையே இழக்கத் தயாராகிவிட்டது.

இலங்கை மீதான பார்வையைக் கொண்டிருக்கும் பலநாடுகள் இலங்கை அரசாட்சியில் காணப்படும் பலவீனம் என்ன என்பதைக் கண்டறிந்து இலங்கையுடன் பேரம் பேசுதலில் ஈடுபட்டு வருகின்றன.

ஆட்சியாளர்கள் விடும் அறிக்கைகளைப் பார்க்கும் போது எந்த நாட்டுக்குமே அடிபணியாத இறைமையுள்ள தனித்துவமான நாடு போல இலங்கை தென்பட்டாலும் யானை விழுங்கி வெளியே வந்த விளாம் பழம் மாதிரி உள்ளுக்குள்ளே ஒன்றமில்லாத கோது போன்ற நிலைதான் இலங்கையின் நிலை.

இராமாயணத்தில் கையறு நிலையில் இராவணன் நின்றதாக சித்திரிக்கப்படும் இடத்தில் கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற வரி வருகின்றது.

இன்று அந்த தமிழ்ச் சக்கரவர்த்தி ஆண்ட நாடு அவனது நிலையாக ஆகி நிற்கின்றது.



ஏலையா
க.முருகதாசன்
(யேர்மனி)

ஒரு நாடு வாங்கும் கடன் என்பது சமகால ஆட்சியில் உள்ள அரசாங்கம் வாங்கும் கடனாகவே ஆட்சித் தலைவன் வாங்கும் கடனாகவோ கொள்ளப்பட மாட்டாது.

கடன் வாங்கிய அரசாங்கம் ஆட்சியிழந்து எதிர்கட்சிகள் ஆட்சியமைக்கும் தருணத்தில்கூட வாங்கிய கடனுக்கு பாத்திரவாளிகள் ஆட்சியிலீருந்தவர்களே என அரசாட்சியை இழந்தவர்கள்தான் கடனைக் கொடுக்க வேண்டுமென்ற விதியும் இல்லை. ஏனெனில் ஆட்சி மாறினாலும் சரி ஆட்சித் தலைவன் மாறினாலும் சரி, வாங்கிய கடனை கடன் கொடுத்த நாடுகளுடன் கடன் பெற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த வரைமுறைகளுக்கு ஒப்ப அடுத்தடுத்த அரசாங்கங்கள் கடனைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.





இவை வட்டியுடன் கூடிய கடனாகவும், வட்டியில்லாக் கடனாகவும், திருப்பித்தர வேண்டியதில்லை என்ற உதவி நிதியாகவும் இருக்கும்.

மேற்கூறிய மூன்று முறைகளுமே கடன் வாங்கிய நாடுகளை அடிமையாக்கும் நிலைதான். தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன முழம் என்ன என்பது போல இலங்கை சீனாவிடம் வாங்கிய கடன் வகை தொகையின்றி பெருகிக் கொண்டே இருக்கின்றது.

அபிவிருத்தியா, கடனா எதுவாக இருந்தாலும் சீனாவின் உதவிக்கரம் கர்ணனை மிஞ்சியதாகவே இருக்கிறது.கர்ணன் வலது கை கொடுப்பதை இடது கை அறியக்கூடாது என்பதற்காக வலது கையால் மட்டுமே கொடுத்ததாக கதை உண்டு.

அதே போல சீனா கொஞ்சம் வித்தியாசமாக கொடுக்கும் கடனால் ஆளும் அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கு எதிரானவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் கொந்தளிப்புகளை ஏற்படுத்திய வண்ணமே கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

ஆகாயத்தில் நின்று தென்னிலங்கையைப் பார்த்தால் உயர உயர கட்டிய புத்தமத தூபிக் கட்டிடங்கள் டபோவாக்கள் என இலங்கை புத்த சமயத்தை தழுவும்


26 ஆம் பக்கம் பார்க்க...



Dear customers , Warehouse office moved to new location. Address below,
Unit K5, Metropolitan Park, Field Way Greenford ,Middx UB6 8UN

# இலங்கை இனி யாருடைய நாடாகும்?

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...






நாடு என ஒரு பிரமிப்பை ஏற்படுத்தும். அதே இலங்கையின் வட கிழக்கை ஆகாயத்தில் நின்று பார்த்தால் ஆங்காங்கே தெரியும் சைவக் கோவில்களின் கோபுரங்களால் சைவத்தை தழுவும் நாடு என்றும் தெரியும்.

இதைவிட ஆகாயத்தில் நின்று பார்த்தால் உயர்ந்த தேவாலய கட்டிடங்கள்,கொஞ்சம் உயரம் குறைவாகக் கட்டியிருந்தாலும் ஆங்காங்கே ஒலிபெருக்கிகளுடன் கூடிய பள்ளிவாசல்களைப் பார்த்தால் கிறீஸ்தவ, இஸ்லாமிய மதத்தை தழுவும் மக்கள் வாழும் நாடு என்பதையும் கண்டு பிடித்துவிடலாம்.

ஆனால் சீன மொழி வீதியால் போகிறவனுக்கு பளிச்சென்று தெரிகின்ற பரிச்சயமான மொழியாகப் போகின்றது. இலங்கையரசாங்க ஆட்சியாளர்கள் சொல்லுகின்ற மொழி கடந்து மதம் கடந்து அனைவரும் இலங்கையர்களே என்பது கேட்பதற்கு அமிர்தமான வார்த்தைகள்தான்.

ஆனால் அது இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதை நம்ப முடியாமல் இருக்கின்றது.

இரண்டு மொழிகள் பிரதான மொழிகளாக இருந்த போதும் இன்னொரு மொழியான சீன மொழி மெதுவாக இலங்கைக்குள் பகிரங்கமாகத் தெரியுமளவிற்கு புகுந்துள்ளதை எல்லோரும் அறிவர். மிடுக்குடன் இருக்க வேண்டிய இலங்கை வலுவிழுந்து சீனா என்ற ஊன்று தடியைப் பிடித்துக் கொண்டு நடக்கும் பரிதாப நிலையை எட்டியுள்ளது.

இலங்கை வாங்கிய கடனால், இலங்கைச் சனத்தொகையின் ஒவ்வொரு குடிமகனும் விலை பேசப்பட்டே அரசு கடன் வாங்கியிருக்கின்றது. இலங்கையில் உள்ள சாதாரண குடிமகனில் தொடங்கி அரசியல்வாதிகள் அனைத்துத் துறை அறிஞர்கள் என எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகத் தெரியும் ஒரு விடயம் கொழும்போடு ஒட்டி மண் போட்டு



நிரப்பி உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போர்ட் சிட்டி இலங்கைக்கு உரியது அல்ல அது சீனாவின் இன்னொரு குட்டித் தீவென்பது.

தமிழர் பகுதியில் சிறுவர்களுக்கான பூங்கா ஒன்று கட்டப்பட்டு முகப்பில் சீனா மொழி பொறிக்கப்பட்டிருப்பதை செய்திகள் மூலம் அறிய முடிகிறது. மூக்குப் போனாலும் சகுணம் பிழைக்கக்கூடாது என்ற அரசின் நிலைப்பாட்டினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படப் போகின்றது. இலங்கையை கிட்டத் தட்ட சீனாவுக்கு விலைபேசி கடன் அபிவிருத்தி அது இதுவென சீனா அட்சவாரமும் கொடுத்துவிட்டது. இப்பொழுது எல்லோருடைய மனதிலும் இலங்கை உண்மையில் யாருடைய நாடு என்ற கேள்வி ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இதற்கிடையில் கடற்றொழில் அமைச்சர் இந்தியாவைச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக இந்திய மீனவர்கள் அனுமதியுடன் இலங்கைக் கடற் பரப்புக்குள் மீன் பிடிக்கலாம் என்ற திட்டம் ஒன்றை கொண்டுவர இருப்பதாகச் செய்திகள் மூலம் அறியும் போது அதிர்ச்சியாக இருக்கின்றது. இலங்கை வளமற்ற நாடல்ல.அனால் இலங்கையில் தீர்க்கப்பட விரும்பாத இனப் பிரச்சினை காரணமாக இலங்கை எடுப்பார் கைப்பிள்ளையாகவும் கிள்ளுக்கீரையாகவும் பரிதாப நிலைக்கு ஆளாகியிருக்கின்றது.

சீனாவும் இந்தியாவும் இலங்கைக்கு இராஜதந்திர மிரட்டல்களை விடுத்து வருகின்றன.தாங்கள் சீனாவின் பக்கம் சாயவில்லை என்பதைக் காட்டுவதற்கே தமிழக மீனவர்கள் அனுமதி பெற்று இலங்கைக் கடற் பரப்பில் மீன்பிடிக்கலாம் என்ற கடற்றொழில் அமைச்சரின் திட்டம் இலங்கை மீனவர்களைப் பெரியளவில் பாதிக்கும் செயலாகும்.

இலங்கையின் ஆளுமைக்கு உட்பட்ட தீவுகள் அடங்கிய மண்ணை சீன தன்வசப்படுத்த இலங்கையின் பொருளாதார மூலவளங்களில் ஒன்றாக இருக்கும் மீன்வளமும் கடலும் இந்தியா வசமாகப் போகின்றது.

வீடு யாருக்கென அண்ணன் தம்பிகள் சண்டை பிடித்தால் வழக்கை தீர்க்கிறோம் தராசைப் பிடிக்கிறோம் என வருபவன் வீட்டை தனதாக்குவது போலத்தான் இனி இலங்கையின் நிலையாகும்.

எல்லா வளமும் அளவான சனத்தொகையும் படித்த மக்களுமாக கம்பீரமாக செல்வச் செழிப்புடன் நிமிர்ந்து நிற்க வேண்டிய இலங்கை இந்தியா சீனா ஆகிய இரு நாடுகளின் மிரட்டலுக்கு ஆளாகியிருப்பது ஒவ்வொரு இலங்கையனையும் கவலையடையச் செய்யும் செயலே ஆகும்.

இலங்கையின் போர்ட் சிற்றி இனிச் சீனாவின் தீவேயாகும்,சந்தேகமே தேவையில்லை.அண்டை நாடுகளுடன் மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்துடனும் நட்பாக இருக்கலாம்.ஆனால் உதவி என்ற பெயரில் அவர்களின் ஆளுமைக்கோ ஆக்கிரமிப்புக்கோ ஆளாகவே கூடாது.

இலங்கை மக்கள் இனி தமது நாடு என்று சொந்தம் கொண்டாட முடியாத நிலை இலங்கைக்க வரப் போகின்றது.

---

# அறிவான தனிச் சுடர் நான் கண்டேன் அதை ஆடலுலகென நான் கண்டேன்!

13 ஆம் பக்கத் தொடர்ச்சி...

சக கலைஞர்களிடத்தே கொண்டிருக்கும் நட்பின் சுவாரசியம், காண்போரையும் காதல் கொள்ள வைக்கும். நாட்டியத்தை தவிர, ஒரு நடனக் கலைஞராக வேண்டுமெனில் பட்டை தீட்டப் பட வேண்டிய விடயங்கள் பலவென உணர்ந்தேன்.

இவ் இயற்க்கையோடும், மக்களோடும், அனைத்து உயிர்களோடும் ஆனந்தம் தரவல்ல தொடர்ப்பினை ஏற்படுத்தவல்ல ஒரே சாதனம் நாட்டியம் என்ற குருநாதரின் திண்ணிய எண்ணத்தினை மனத்திருத்தி அவரது 85 ஆவது அகவை தினத்தில் உலக இலங்கை பரதநாட்டிய கலைஞர்கள் சங்கத்தினை ஆர்மபித்தோம்.

நாட்டியம், இசை, இலக்கியம், தொழில்நுட்பம் என அறிவினைப் பெருக்கக் கூடிய விடயங்களை,ஆய்ந்து அறிந்த விற்பன்னர்களிடம் இருந்து பெற்று தரும் களமாகவும், இலங்கையின் இளம் ஆற்றுகை கலைஞர்களின் சிறப்பினை உலக அரங்கிற்கு கொண்டு சேர்க்கும் தளமாகவும், உலகளாவிய ரீதியில் உள்ள இலங்கை நடன கலைஞர்களை ஒன்றிணைக்கும் கூடமாகவும், இலங்கையின் நாட்டிய வரலாற்றினை ஆவணப்படுத்தும் நூலகமாகவும் செயற்பட்டு வருகிறது.150 இற்கு மேற்பட்ட நடன ஆசிரியர்கள் உலகளாவிய ரீதியில் இருந்து இணைந்துள்ளனர். ஓராண்டினை பூர்த்தி செய்யும் இக்குழுவினூடு பயணிக்க விரும்பியவர்களை ஆரத்தழுவி வரவேற்க காத்திருக்கிறோம்.

இப்பணியினை ஆற்ற என்னைத் தேர்ந்தெடுத்த படைப்பிற்கு நன்றி கூறுவதோடு, இப்ப பணியே என் குருநாதருக்கு ஆற்றும் காணிக்கை என்று கருதி , குருநாதரின் பொன்னர் திருவடிகளை மேவிப் பணிகிறேன். எத்தனை கோடி இன்பம் வைத்தாய்!

**ஆட்டுவித்து ஆடி அகம்**
**புகுந்தாண்டு**
**தேட்டம் கெடுத்த அற்புதம்**
**அறியேனே!**







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கலாநிதி ஆறு.திருமுருகன் பிறந்தநாள் அறநிதியச் சபைவழங்கும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2021



**கலாநிதி. ஆறு. திருமுருகன்**

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகனைக் கௌரவித்து பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கி புதியதோர் அறக்கட்டளையை நிறுவியுள்ளது.

ஆண்டு தோறும் எம்மண்ணில் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆற்றலாளர் இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தல் என்ற திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

2021 ஆண்டுக்கான ஆற்றலாளர் விருது பெறுபவர்களை அறநிதியச்சபை கூடி இருவரைத் தெரிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நரம்பியல் சத்திரசிகிச்சை **மருத்துவ வல்லுநர் பொன்னம்பலம்** ஆதித்தன்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட **பேராசிரியர் கலாமதி முருகானந்தன்.**

மேற்குறிப்பிட்ட இரு ஆற்றலாளர்களும் இவ்வாண்டுக்கான அறநிதிய விழா நடைபெறும் நாளில் கௌரவிக்கப்படவுள்ளனர். நாட்டின் அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு அறநிதிய வைபவம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# யேர்மனியில் ஆதிசங்கர் திருக்கோவில் கும்பாபிஷேகம்



ஆதிசங்கரருக்கு ஓர் அற்புதத்திருக்கோவில் யேர்மனி ஹம் சிறி காமாட்சி அம்பாள் ஆலயத்திலே நிறுவப்பட்டது. இதன் கும்பாபிஷேகம் 17.05.2021 நடைபெற்றது.



**படங்கள்: ஆன்மீகத்தென்றல் தம்பி புவனேந்திரன்.- நந்தபாலன். பாலகிருஷ்ணன்.**

# கொழும்பில் தன்னாதிக்கத்துடன் உருவாகியிருக்கும் சீன நகரம்!

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதேவேளை எதிர்க்கட்சிப்பக்கத்தில் உள்ள முஸ்லிம் கூட்டமைப்பு எம்.பி.யான அலிசப்ரி ரகீம் மற்றும் சுயாதீன எம்.பி.யான அத்துரலிய இரத்தின தேரர் ஆகியோர் சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது போலவே எதிர்க்கட்சியை சேர்ந்த அரவிந்தகுமார், இஷாக் ரஹ்மான், டயானா கமகே ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் பின்னர் சட்டமூலத்திலுள்ள சில சரத்துக்களை நிறைவேற்ற எதிர்க்கட்சியினர் வாக்கெடுப்புக்களைக் கோரியதுடன் பல சரத்துக்களுக்கு திருத்தங்களையும் முன்வைத்தனர். இந்த திருத்தங்களில் பெருமளவானவை அரசினால் நிராகரிக்கப்பட்டு குறித்த சரத்துக்கள் திருத்தமின்றி நிறைவேற்றப்பட்டன. எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரச சார்பில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மறுத்துரைத்தார். 'கொழும்பு துறைமுக ஆணைக்குழுச் சட்டத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கு உள்ள நிதி அதிகாரத்துக்கு ஒரு துளியளவேனும் பாதிப்பு ஏற்படாது. அத்து டன், துறைமுக நகரின் முழுமையான நிதி அதிகாரமு ம் அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே இருக்கும்' என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். 'நாட்டுக்கு அந்நிய செலாவணி அத்தியாவசியமாகும் என்பதை அனைவரும் அறிவோம். நாட்டின் கடன் சுமையை மேலும் மேலும் அதிகரிக்காது அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்வது அவசிய ம். நாம் மிகவும் போட்டியானதொரு உலகத்தில்தான் வாழ்கிறோம். அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்ள வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக புதிய நிறுவனங்களை உருவாக்க வேண்டும். புதிய உபாய மார்க்கங்கள் அவசியம். கொழும்பு துறைமுக நகரம் அவ்வாறானதொரு நிறுவனம்' என்பது அமைச்சர் பீரிஸின் கருத்தாக இருந்தது.

இருந்த போதிலும், எதிர்க்கட்சிகள் இதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவை. 'தற்போதைய துறைமுக நகர சட்டமூலமானது 1815 இல் கைச்சாத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தைவிடவும் மிகப்பெரிய காட்டிக்கொடுப்பு' என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

'கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலமானது இந்நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி, அரசியல் சுதந்திரம் ஆகியவற்றுக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதுடன் மரண அடியாகவும் அமைந்துள்ளது. அரசியலமைப்பை மீறியே குறித்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. சட்டமூலமொன்றை உருவாக்குவதற்கான நடைமுறை இருக்கின்றது. அதனையும்மீறி வெளிநாட்டு நிறுவனமொன்றின் சட்டத்தரணியே



இச்சட்ட மூலத்தை தயாரித்துள்ளார். சட்டமூலத்திலுள்ள சரத்துகளில் 34.6 வீதம் அரசமைப்புக்கு முரணானது என்பது உயர்நீதிமன்ற தீர்ப்பு மூலம் உறுதியாகின்றது' என்பதையும் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியிலேயே இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இச்சட்டமூலத்தின்படி துறைமுக நகருக்குச் செல்வதற்கு விஷேட அனுமதி பெறப்பட வேண்டும். அங்கு அமெரிக்க டாலர்தான் பயன்படுத்தப்படும். இலங்கையின் வழமையான சட்டங்கள் அங்கு செல்லுபடியற்றதாக இருக்கும். இலங்கையின் வரிச்சட்டங்கள் அங்கு நடைமுறைப்படுத்தப்படாது என்பது உட்பட ஒரு தனிநாட்டுக்குரிய அனைத்து அம்சங்களையும் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு கொண்டிருக்கும்.

பல ஆயிரம் கோடி டாலர்களைச் செலவிட்டு இலங்கைத் தீவின் வரைபடத்தையே மாற்றும் வகையில் தனியான ஒரு பாரிய நகரத்தை கடலுக்குள் அமைத்துள்ள சீனா, அதனை நிர்வகிக்கும் அதிகாரத்தை இலங்கைக்கோ மற்றொருவருக்கோ கொடுத்துவிட்டுச் செல்லும் என்பது எதிர்பார்க்கக்கூடியல்ல. அதற்குத் தேவையான சட்டமூலங்களைக் கொண்டுவருவதற்குத் தேவையான அழுத்தங்களை சீனா நிச்சயமாக ராஜபக்ஷக்களுக்குக் கொடுத்திருக்கும்.

விரும்பியோ விரும்பாமலோ கொழும்புக்கு அருகே சீனாவின் பாரிய நகரம் ஒன்று உருவாகிவிட்டது. இங்கிருந்து கொண்டு கொழும்புத் துறைமுகத்தை முழுமையாக உளவு பார்க்க முடியும். அதனைவிட, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கும் இது பெரும் சவாலாகப் போகின்றது!




05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பேர் அனுமதிக்கப்படுகிறார்கள் என்ற எண்ணிக்கை அடிப்படையிலும் மரணிப்பவர்களின் எண்ணிக்கையில் தொடர்ந்து வீழ்ச்சியடைவதிலுமே தங்கியுள்ளது. முதலாம் கட்டம் இரு கட்டங்களாக மார்ச் 8 திகதியும், மார்ச் 29ஆம் திகதியும் பூர்த்தி செய்யப்பட்டது. பள்ளிக்கூடங்கள் திறக்கப்படல், அயலவர்கள் 6 பேர் வீட்டுக்கு வெளியே சந்தித்து பேசுவது அனுமதிக்கப்படல், இவை முதற்கட்டத்தில் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டன.

இரண்டாம் கட்டமான ஏப்ரல் 12ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட விஷயங்கள் அத்தியாவசியமற்ற விற்பனை நிலையங்கள் மீண்டும் திறக்கப்படல், உதாரணமாக முடிதிருத்தும் நிலையம் (Saloon), உடற்பயிற்சிக் கூடம் (gym) பெண்களின் நகங்களை அழுகுபடுத்தும் நிலையங்கள் (nail studios) நூலகங்கள், திறந்தவெளி வர்த்தக நிலையங்கள் திறந்து செயல்பட அனுமதிக்கப்பட்டன. இதே அடிப்படையில் உணவு கடைகளும் மதுபான விற்பனை கடைகளும் வாடிக்கையாளர்களை கடைக்கு வெளியே மட்டும் உபசரிக்க அனுமதி வழங்கப்பட்டது அல்லது வேண்டிய உணவை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது. மூன்றாம் கட்டம் 17/5/21 முதல் சமூக தொடர்பு தடைகள் பெரும்பாலானவை அகற்றப்படுகின்றன. ஆனாலும் 30க்கும் அதிகமானோர் ஒரே இடத்தில் கூடுவது தொடர்ந்து தடை செய்யப்படும்.

உணவகங்களுக்கு உள்ளே உட்கார்ந்து உணவருந்த 6 பேர் கொண்ட குழு மட்டும் அனுமதிக்கப்படும். மதுச்சாவடி, சினிமா மற்றும் நாடக அரங்கம், அருங்காட்சியகம், கலையரங்குகள் விடுதிகள் முற்றாகத் திறக்கப்பட அனுமதியில்லை. குடும்ப உறவினர்களும் நண்பர்களும் சந்திக்கும் போது சமூக இடைவெளியை தொடர்ந்தும் கடைப்பிடித்தல் அவசியம். ஒருவரை ஒருவர் கட்டியணைந்து டரப செய்ய அனுமதிக்கும் என அரசு அறிவித்தது.

உதைபந்தாட்ட விளையாடு மைதானங்கள் திறக்கப்பட அனுமதியுண்டு. கோவிட் பரிசோதனைக்கு அமைய இந்த விதி கடைப்பிடிக்கப்படும். பிறகு எல்லா தனியார் குடும்ப நிகழ்வுகளிலும் திருமணங்கள், உபசரிப்பு நிகழ்ச்சிகள், இறுதிச் சடங்குகள் இவற்றில் 30 பேர் மட்டுமே கலந்து கொள்ளலாம் என்ற நிபந்தனை மாற்றப்படவில்லை. பல்கலைக்கழக மாணவர்களில் எஞ்சியிருப்போர் தத்தம் வளாகங்களுக்கு திரும்ப வேண்டும். கோவிட் தொற்றுக்கான சுயபரிசோதனை உபகரணங்கள் (kits) பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஜூன் 21ஆம் திகதி சமூக தொடர்புகள் பற்றிய கட்டுப்பாடுகள் முழுமையாக அகற்றப்படும். இரவு விடுதிகளை இத்திகதிக்குப் பின்னர் திறக்க முடியும் என்று அரசு நம்புகிறது. பிரம்மாண்டமான கொண்டாட்டங்கள் மீதான தடைகளையும் அகற்ற முடியுமென்று அரசு நம்புகிறது. நுழைவு அனுமதிக்கு ஒரு முன் நிபந்தனையாக கோவிட் பரிசோதன மேற்கொள்ளப்படலாம். ஜூன் மாதம் 21ஆம் திகதி திருமணங்களுக்கு வரும் விருந்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது பற்றி பிரிட்டிஷ் அமைச்சரவை தீர்மானிக்க இருக்கிறது. ■

# இங்கிலாந்தில் மீண்டும் கல்யாணம்,கச்சேரி, கொண்டாட்டங்கள் ஜூனில் தொடங்குமா?

# கண்டால் வரச்சொல்லுங்கள்

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அடிப்படையாகக் கொண்டு, கொரோனா இயற்கையானது அல்ல என்று 100% நம்பிக்கையுடன் இதைச் சொல்ல முடியும். இது வெளவால்களிலிருந்து வரவில்லை. சீனா அதை உருவாக்கியது. இன்று நான் சொல்வது பொய்யாக இருந்தால்! நான் இறந்த பிறகும், அரசாங்கம் எனது நோபல் பரிசை திரும்பப் பெறலாம்.இப்படி உண்மை, பொய் கலந்த ஒரு செய்தியை நம்பக்கூடியவர் பெயரில் பரப்புகிறது. இந்த செய்தியை நோபல் பரிசு பெற்ற தாசுகு ஹொன்ஜோ நாவல் மேலே தனது பெயரில் வெளிவந்த செய்தியை மறுக்கிறார். இந்த மறுப்பும் உண்மையா என்பது அவனுக்குதான் தெரியும்.

அவனைக் கண்டால் வரச்சொல்லுங்கள். நேரில் கதைப்பதுபோலா வருமா? இந்த வட்சப்பும் டுவிட்டரும்.

**பி.குறிப்பு: தடுப்பூசி போட்டுக் கொண்டு வரச்சொல்லுங்கள்..** ■

# கண்டிஷன்... கண்டிஷன்...

**எனக்கு வரப்போகிறவர் இப்படித்தான் இருக்க வேண்டும் எனக் கண்டிஷன் போடும் பெண்கள்!**



07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் சந்தோசமான வாழ்வு. இந்த சந்தோசத்துக்கு எதுவெல்லாம் இடையூறாக இருக்கப்போகிறது என்பதை யூகிக்கிறார்களோ அதையெல்லாம் விளக்கவே முயட்சிக்கிறார்கள். இதுவும் காலமாற்றத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றே. சுய சிந்தனையும் , தொலைநோக்கும் பார்வையும், எதிர்காலம் பற்றிய தெளிவுமே இந்த கண்டி சங்களின் பின்னிருக்கும் யதார்த்தம்.

இந்த மாற்றத்தினை மகன்களைப் பெற்றவர்கள் ஏற்றுக்கொண்டார்களோ இல்லையோ மகள்களைப் பெற்றவர்கள் புரிந்துகொண்ட தங்கள் பெண்களுக்கு உறுதுணையாக நிற்கிறார்கள். பெரும்பாலான பெற்றோர் தம்முடைய பெண்களையே சார்ந்திருக்கவேண்டிய சூழ்நிலையும் இந்த புரிந்துணர்வுக்கு காரணமாகவும் இருக்கலாம் .

என்னதான் நேர்மையான சில கண்டிசன்களும், எதிர்பார்ப்புக்களும் இருந்தாலுமே இதிலும் இழக்க வேண்டிய சில விடயங்கள் இல்லாமலும் இல்லை. தனிமையுணர்வு என்ற ஒன்றைத்தாண்டி, பெண்ணைப் பெற்றோருக்கும் வயது ஏறிக்கொண்டே போவதால் அப்பெற்றோர் 70 வயது தாண்டி உடல்நலக் குறைவால் அவதியுறும்போது , பெற்றோரின் ஆதரவில் சீரும் சிறப்புமாக நடக்கவேண்டிய திருமணங்களை பெற்றோரின் வயோதிகம் அல்லது இழப்பு காரணமாகதானே நடத்திக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது . படிக்கவைத்து ஆளாக்கி நிம்மதி பெருமூச்சி விடவேண்டிய நேரத்தில் அறுபது வயதைக்கடந்த பெற்றோர் மகளின் திருமணத் தடையால் ஒருவித குற்ற உணர்விற்கு ஆளாகி உறவினர்களையும் , நண்பர்களையும் ஒதுக்கி தனிமைப்பட்டு ஒருவித மனவுளைச்சலுக்கு ஆளாகின்றனர் . இதனால் தம் பெற்றோர் நிம்மதியான வயோதிக வாழ்க்கையினை அனுபவிப்பதைக் கண்ணுறும் வாய்ப்பை இந்தப் பெண்கள் இழக்கின்றனர். உடல்வலு இருக்கும் காலத்திலேயே தங்கள் பேரக் குழந்தைகளையும் வளர்க்கும் , பராமரிக்கும் நிலையினை எய்தவேண்டும் என்று எதிர்பார்க்கும் இந்த தாத்தா பாட்டிகளுக்கு தங்கள் மகள்களின் பிந்திய திருமணங்களால் தங்கள் பேரக் குழந்தைகளை தூக்கிக் கொஞ்சக்கூட வலு விழந்து போய் விடுகிறது . பிந்திய திருமணம் .. தம்பதிகள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்கிறார்களோ இல்லையோ , இருவரும் தனித்த பயணங்கள் , மற்றும் வாழ்க்கை முறைமைகளை அனுபவிக்கிறார்களோ இல்லையோ , வயது ஏறுகிறதே என்ற பதட்டத்தில் அவசரஅவசரமாக முதல் குழந்தையை பெற்றுக்கொள்வார்கள் , அதன்பின் ? எங்கே , 40வயது தாண்டி விட்டால் குழந்தைபிறப்பு தள்ளிப்போய் விடுமோ என்ற ஒருவித அச்சத்தில் மீண்டும் அவசரஅவசரமாக அடுத்த குழந்தை பற்றிய சித்தனை மனதுக்குள் ஓடத்துவங்கும் ! இருவருமே சில தனிப்பட்ட சந்தோசங்களை இங்கே பறிகொடுக்க நேருவதுடன், உடல் ரீதியாகவும் பெண் பாதிக்கப்படுகிறாள் . அதுமட்டுமா ? கருத்தரிக்கவேண்டிய வயது தாண்டிவிடுவதால் ஒரு குழந்தையை கண்ணால் பார்க்க கருத்தரிப்பு மையம் , மருத்துவர் , பரிசோதனைகள் என்று அலைச்சலுக்கு அலைச்சல் , மனவுளைச்சல் , செலவு என்று அதன் பின்னரும் தொடரும் ஏராளமான துன்பங்கள் .

ஆக, காலமாற்றம் பெண்களின் மனதில் எதிர்பார்ப்புக்களையும், அந்த எதிர்பார்ப்புக்கள் கன்டிஷன்களையும் ஏற்ப்படுத்திவருவதை நாம் தவறு என்று எடுத்த எடுப்பில் கூறிவிட இயலாது தான் என்றாலும் , அந்த கண்டிஷன்கள் நம்முடைய வாழ்க்கையில் மிகப்பெரிய பாதிப்புக்களை ஏற்ப்படுத்திவிடாது எல்லாவற்றையுமே சமப்படுத்திக்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதையும் இங்கே குறிப்பட விரும்புகிறேன் . ■








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கமலுடன் நடிக்கும் விஜய் சேதுபதி



தேவர் மகன் இரண்டாம் பாகமாக தயாராகும் தலைவன் இருக்கின்றான் படத்தில் கமல்ஹாசனுடன் இணைந்து விஜய்சேதுபதி நடிக்க உள்ளதாக கூறப்பட்டது. ஆனால் பட வேலைகள் தொடங்கப்படவில்லை. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்கும் விக்ரம் படத்தில் கமலுக்கு வில்லனாக நடிக்க விஜய்சேதுபதியிடம் பேசி வந்தனர். இதுகுறித்து விஜய்சேதுபதி கூறும்போது, விக்ரம் படக்குழு என்னை அணுகியது உண்மைதான். அது வில்லன் கதாபாத்திரம். ஆனால் தேதிகள் ஒதுக்கப்படவில்லை.

விக்ரம் படத்தில் ஏதேனும் சிறப்பான விஷயங்கள் இருக்க வேண்டும். இல்லையென்றால் அதை செய்வதில் அர்த்தம் இல்லை என்றார். இந்த நிலையில் விக்ரம் படத்தில் கமலுக்கு வில்லனாக விஜய்சேதுபதி நடிப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும், தகவல் வெளியாகி உள்ளது.. இப்போது விஜய்சேதுபதிக்கு சம்பளம் பல கோடி. அது பத்துக் கோடியாகவும் இருக்கலாம்.



# சர்ச்சையை ஏற்படுத்தப்போகும் 'இனம்'




2013 ஆம் ஆண்டு சந்தோஷ் சிவன் இயக்கத்தில் இனம் என்ற திரைப்படம் வெளியாகியிருந்தது. அந்த படம் ஈழத்தைக் கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்ட படம். அதன் துணைத்தலைப்பாக the mob (அதாவது கூட்டம்) என்று தமிழர்களை இழிவு செய்யும் பொருள் கொண்டு குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் படமும் இலங்கை தமிழ் மக்களை இழிவுபடுத்தும் விதமாக இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதையடுத்து திரையுலகினர் பலரும் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து 3 நாட்களில் திரையரங்குகளில் இருந்து தூக்கப்பட்டது.

மேலும் படத்தை வெளியிட்ட இயக்குனரும் தயாரிப்பாளருமான லிங்குசாமி மன்னிப்புக் கேட்டார்.இந்நிலையில் 7 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த படம் மீண்டும் இப்போது ஓ.ரி ரி. யில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் அமைப்புகளிடம் இருந்து மீண்டும் எதிர்ப்புக்குரல்கள் உருவாகலாம் என சொல்லப்படுகிறது.




# அறிவழகன் இயக்கத்தில் நயன்தாரா

ஈரம் படம் மூலமாக கவனம் ஈர்த்தவர் இயக்குநர் அறிவழகன். அவர் சில ஆண்டுகளுக்கு முன்னதாக நயன்தாராவுக்கு ஒரு கதை சொல்லி இருந்தார். இந்நிலையில் இப்போது திடீரென அறிவழகன் படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளாராம், நயன்தாரா.

அது மட்டுமில்லாமல் அந்த படத்தை தங்களின் ரவுடி பிக்சர்ஸ் மூலமாகவே தயாரிக்கும் முடிவிலும் இருக்கிறாராம்.

# முதல் பார்வையில் காதல் வரும் என்பதில் நம்பிக்கை இல்லை!

முதல் பார்வையில் காதல் வரும் என்பதில் நம்பிக்கை இல்லை, அப்படி வந்தால் அது கவர்ச்சிதான் என நடிகை ரகுல் பிரீத் சிங் தெரிவித்துள்ளார். தமிழில் தடையற தாக்க படத்தில் அறிமுகமாகி புத்தகம், என்னமோ ஏதோ, தீரன் அதிகாரம் ஒன்று, தேவ், என்.ஜி.கே உள்ளிட்ட பல படங்களில் நடித்தவர் ரகுல் பிரீத் சிங். தெலுங்கிலும் முன்னணி நடிகையாக இருக்கிறார்.



சமீபத்தில் ரகுல் பிரீத் சிங் அளித்த பேட்டி ஒன்றில், வாழ்க்கையில் மகிழ்ச்சிதான் முக்கியம். சந்தோஷம் இல்லாமல் பணம், புகழ் இருந்து எந்த பயனும் இல்லை. உண்மையாக இருப்பதுபோல் போலியாக நடிப்பவர்களை எனக்கு பிடிக்காது. எனது எண்ணங்களில் ஆன்மீக தாக்கம் இருக்கும். வெற்றி, தோல்வி இரண்டும் என்னை பாதிக்காது.

காதல், கவர்ச்சி. முதல் பார்வையில் காதல் வரும் என்பதில் நம்பிக்கை இல்லை. அப்படி வந்தால் அது கவர்ச்சிதான். பழகி ஒருவரை ஒருவர் புரிந்து அதன்பிறகு காதலிப்பதுதான் உண்மையானது. எனக்கு இன்னும் காதல் வரவில்லை. ஒருவேளை நான் காதலிக்கும் நபர் மோசம் செய்தால் அவரை விட்டு விடுவேன். கவர்ச்சி என்பது அழகில் இல்லை. அவர்களுக்குள் இருக்கிற தன்னம்பிக்கையில் வரும்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com


Deutsche Bank
Mehr Wünsche erfüllen.
Möglich mit dem PrivatKredit, der
Ihnen finanziellen Spielraum gibt.
#PositiverBeitrag
Jetzt mit 1,75 %
effektivem Jahreszins.*
Nettodarlehensbetrag 1.000 EUR
Effektiver Jahreszins* 1,75%
Fester Sollzinssatz p. a. 1,74%
Monatliche Rate 84,12 EUR
Laufzeit in Monaten/Anzahl Raten 12
Zu zahlender Gesamtbetrag 1.009,43 EUR
Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß
§ 6a Absatz 4 PAngV.
*Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.
Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main


EurAsian-Tour
VALUTRANS MONEY TRANSFER
EurAsian-Tour Further Str.146 41462 Neuss
Rishi Ganeshamoorthy | Rishi 0174 96 44 965
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84 | info@eurasian-tours.com


Jasmine Silk House
என்றும் எம்முடன் இணைந்து
இருங்கள். உங்களுக்கு சேவை
செய்ய காத்திருக்கிறோம்.
தொடர்பு இலக்கம்: 01731937325
ஆடைகளின் ராணி
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House"
Fester Str.50- 40882 Ratingen


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303 | Fax: 02161-309282


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்றேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart
Tel: 0711 615 8976/ 0170 334 4059


Shakthy Foundation
துவாரகமாய் முதியோர் இல்லம்
SHAKTHY FOUNDATION
தொடர்புகளுக்கு:-
Dwarakamal Senioren WG
Alpenroder Str.59 65936 Frankfurt am Main, Germany
Tel: 0152-14069504 Mrs.Nava (Resha)
சீரடி பாபாவின் அருளால் ஜேர்மனி பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் திகதி துவாரகமாய் முதியோர் இல்லம் உருவாகியுள்ளது. எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே உங்களுக்கு ஓர் நற்செய்தி. உங்கள் பெற்றோரை உங்களைப் போலவே அன்பாக அரவணைத்து பராமரிப்போம் கவலையை விடுங்கள் பிராங்க்பர்ட் நகரில் 01.10.2020 ஆம் தகதி முதல் துவாரகமாய் முதியோர் இல்லம் அமைந்துள்ளது. இங்கு தமிழில் உரையாடி நமது தமிழ் உணவுடன் முதியவர்கள் பராமரிக்கப்படுகின்றார்கள். இதற்கு அருகாமையில் அழகான பூங்கா மற்றும் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது. இல்லத்தினால் பெறும் வருமானங்கள் 28.03.2018 திரு. திருமதி. நவநீதன் றிஷாந்தியாவினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு செலவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விடுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள பல மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள்.
Shakthy Foundation
Acc No:
173020027815
HATTON
NATIONAL BANK
Trincomale,
Srilanka
Shakthy Foundation T/M/Chennaiyoor, Central College, Mutur, Trincomale, Srilanka. | S.Rajathurai: +94 77 338 4637


SARAVANAA BHAVAN
புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!
HSB SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K France Germany Australia South Africa Canada U.S.A


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698